Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 163 | சனிக்கிழமை | சித்திரை 25 ஆம் நாள் 08 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்:20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## பைசர் தடுப்பூசிக்கு அனுமதி!

கொழும்பு, மே 8

இலங்கையில் பைசர் கொரோனாத் தடுப்பூசி பாவனைக்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் 19

### மகாவலி "எல்" வலய விவகாரம்

# தமிழ் மக்கள் பிரதிநிதிகளை ஏமாற்றியது கோத்தா அரசு

## அதிகாரங்களை உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கும் நிகழ்வு வவுனியாவில் நாளை

யாழ்ப்பாணம், மே 8

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 8 கிராம அலுவலர் பிரிவுகளையும், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கும் நிகழ்வு வவுனியாவில் நாளை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 19

## அனைத்து பாடசாலைகளும் மறுஅறிவித்தல்வரை பூட்டு!

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே 8

நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், முன்பள்ளி பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகாது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நேற்று அறிவித்தார். 19

## யாழ். மாநகரசபை ஊழியர் ஐவருக்கு ரி.ஐ.டி. அழைப்பு!

### சீருடை விவகார வாக்குமூலத்துக்காக

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் தண்டப் பணம் அறவிடும் நடைமுறையைக் கையாள்வதற்கு மாநகர சபையால் அமைக்கப்பட்ட குழுவில் அங்கம் வகிக்கும் உத்தியோகத்தர்கள் 19

## யாழ். மாவட்டத்தில் 18 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், மே 8

வடக்கு மாகாணத்தில் நேற்று 20 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 18 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 19

## சைனோ ஃபோர்ம் தடுப்பூசிக்கு அனுமதி

கொழும்பு, மே 8

சீனாவின் சைனோஃபோர்ம் தடுப்பூசி பயன்பாட்டுக்கு உலக சுகாதார நிறுவனம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது. 19

## நாள்தோறும் வீரியமடையும் கொரோனாத் தொற்று பரவல்

### நேற்றும் 1,914 பேர் அடையாளம்

கொழும்பு, மே 8

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் பரவல் நாள்தோறும் வீரியமடைகின்றது. நேற்றும் ஆயிரத்து 914 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு 19

## தேவை ஏற்படின் நாடு முடங்கும்!

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 8

தேவையேற்படின் முழு நாட்டையும் முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேதெரிவித்துள்ளார். 19

## தேசிய வெசாக் நிகழ்வை நிறுத்துவதற்குத் தீர்மானம்?

யாழ்ப்பாணம், மே 8

நயினாதீவில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய வெசாக் நிகழ்வுகளை நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. தற்போது நாட்டில் கொரோனாத் தொற்று தீவிரமடைந்துள்ளதை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. 19

## கொரோனா காவு; ஒரேநாளில் 19

கொழும்பு, மே 8

நாட்டில் மேலும் 19 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரிவு நேற்றிரவு அறிவித்துள்ளது. 18

## 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் வீடுகளில்!

### வெளியானது அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, மே 8

இலங்கையில் கொரோனா சிகிச்சை மையங்கள் அல்லது மருத்துவமனைகளில் நிலவும் இடப்பற்றாக்குறை காரணமாக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இன்னமும் தங்கள் வீடுகளிலேயே தங்கியுள்ளனர் என்று ஆங்கில இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. 19

## மயங்க வைத்துக் கொள்ளை: புத்தூரில் ஒருவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணத்தில் மயக்க மருந்து கொடுத்து கொள்ளைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் மானிப்பாய் பகுதியில் வீதியில் நின்ற ஒருவருக்கு இனந்தெரியாதவர் பால் பக்கெற் ஒன்றை அருந்தக் கொடுத்துள்ளார். அதை அருந்தியவர் மயங்கியவுடன், 19

## அ''புரத்திலிருந்து வந்தோரால் நயினாதீவில் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், மே 8

அநுராதபுரத்தில் இருந்து நயினாதீவுக்குச் சென்றவர்களில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டதை அடுத்து, அவர்கள் சந்தித்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் சிகிச்சை 18

## நீர்த் தேக்கத்தில் மூழ்கி குடும்பஸ்தர் மாயம்

வவுனியா, மே 8

கருங்கல் அகழ்வால் ஏற்பட்ட நீர்த் தேக்கம் ஒன்றில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயுள்ளார். இந்தச் சம்பவம் வவுனியா, பம்பைமடுவில் நேற்று நடந்துள்ளது.

கற்பகபுரத்தைச் சேர்ந்த ரவி (வயது-50) என்பவரே காணாமல் போயுள்ளார். 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் சித்த மருத்துவ அபிவிருத்தி மாகாண உயரதிகாரிகளால் புறக்கணிப்பு

## அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் விசனம்

**யாழ்ப்பாணம், மே 8**
**வடக்கு மாகாணத்தில் சுகாதார சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் இயங்கிவரும் சுதேச மருத்துவ திணைக்களத்தின் அபிவிருத்தி ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றது.**

அதாவது 15 வருடங்களை கடந்தும் சுதேச மருத்துவ திணைக்களத்துக்கு என்று தனியான காணி ஒதுக்கீடுகளோ நிரந்தர கட்டடங்களோ இன்றி காலத்துக்குக்காலம் இடமாற்றப்பட்டு தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றது.

அவ்வாறே சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழ் இயங்கி வரும் மத்திய சித்த மருந்தகம், கிராமிய சித்த மருத்துவமனை, மாவட்ட சித்த மருத்துவமனை, மருந்து உற்பத்தி பிரிவு, மூலிகை தோட்டங்கள், மாகாண மூலிகை கிராமம், சமூக மருத்துவ பிரிவு என்பன அடிப்படை வசதிகளோ நிரப்படுத்தப்பட்ட ஆளணியினரோ இன்றி காணப்படுகின்றன.

இவற்றில் சில இடவசதிகளின்றி தனியார் கட்டடங்களில் பல இடையூறுகளுக்கு மத்தியில் மக்களுக்கு தொடர்ச்சியாக சேவையாற்றி வருகின்றன. இவை தொடர்பில் ஆளுநரும் பிரதம செயலர் பணிமனையும், சுகாதார சுதேச மருத்துவ அமைச்சும், சுதேச மருத்துவ திணைக்களமும், பாராமுகமாக இருக்கின்றமை தொடர்பில் எமது சங்கம் ஆழ்ந்த மனவேதனை அடைகின்றது.

அத்துடன் உள்ளூராட்சி சபைகளின் கீழ் இயங்கிவரும் இலவச சித்த மருந்தகங்களில் அதிகமானவை பல வருடங்களுக்கு முன்பு தொடக்கம், அடிப்படை வசதிகளற்ற பழைய கட்டடங்களிலேயே இயங்குகின்றன. இது மிகவும் மனவேதனை அளிக்கும் செயலாகும். ஏனெனில் புதிய கட்டடங்களை அமைப்பதற்கான கட்டட அனுமதி வழங்கும் அதி உயர் அதிகார தன்மை கொண்டு இருப்பது உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் உள்ள பிரதேச சபைகள், நகரசபைகள், மாநகர சபை என்பனவாகும். இந்தச் சபைகளின் கீழ் இயங்கும் இலவச சித்த மருந்தகத்தின் தரத்தை மேம்படுத்தி சித்த மருத்துவ சேவையின் வினைத்திறனை அதிகரிக்க முன்வர வேண்டும் என எமது சங்கம் கேட்டுக்கொள்கின்றது.

சமூக மருத்துவ பிரிவுகளுக்கான களப் பயணத்தின்போது வாகன வசதிகளோ உதவியாளர்களோ இன்றி பல சிரமங்களுக்கு மத்தியில் மக்களுக்கு சித்த மருத்துவம் சார் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகின்றார்கள் எமது மருத்துவர்கள். எனவே மாவட்ட ரீதியாக வாகனங்களை பெற்றுத்தருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எமது சங்கம் கோரிக்கை விடுக்கின்றது.

"செம் மொழியாம் தமிழ் மொழியில்" தோன்றிய சித்த மருத்துவம் தமிழர்களின் வாழ்வியல் நெறியாகவும் கலாசார அடையாளங்களில் ஒன்றாகவும் திகழ்வதனால் இந்த மொழியை முதல்நிலைப்படுத்துவது எமது உரிமை. அந்த வகையில் சித்த மருத்துவ சேவை நிலையங்களின் பெயர்ப் பலகைகளின் காட்சிப்படுத்தல்களின்போது தமிழ் மொழியையே முதன்மைப்படுத்த வேண்டும் என்று அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் துறைசார்ந்த அதிகாரிகளையும் உயர் அதிகாரிகளையும் வலியுறுத்துகின்றது.

மேலும் சித்த மருத்துவத்தை முன்னோக்கி கொண்டுசெல்வதற்கு அரசியல் பிரமுகர்கள், இலங்கை நிர்வாக சேவையை சேர்ந்தவர்கள், உயரதிகாரிகள், சித்த மருத்துவ விரிவுரையாளர்கள், சித்த மருத்துவ நிபுணர்கள், சித்த மருத்துவர்கள் ஆகியோர்கள் மட்டும் அல்லாது ஒவ்வொரு தமிழ் மகனும் முன்வர வேண்டும் என அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுக்கின்றது.

வேகமாக பரவிவரும் கொவிட்- 19 பரவலைத் தடுப்பதற்கு கொவிட்- 19 தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ பிள்ளை ஆயுள்வேத வைத்திய சாலைகளை கொவிட் 19 க்கான சிகிச்சை நிலையங்களாக மாற்றி அமைக்க கேட்டுக் கொண்டபோதும் வடக்கு மாகாணத்தில் அதற்கான நடவடிக்கைகளை வடக்கு மாகாண ஆளுநரோ சுகாதார சுதேச மருத்துவ அமைச்சோ மேற்கொள்ளாதிருக்கின்றமையை அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதோடு இதை ஆரம்பிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கின்றோம். - என்றுள்ளது. (த)

# சிறப்பு வழிபாடு

கோண்டாவில், மே 8
உலகெங்கும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி யாழ்ப்பாணம் கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (ஐ)

# கடத்திச் செல்லப்பட்ட 16 மாடுகள் மீட்பு!

## நால்வர் கைது



வவுனியா, மே 8
வாகனத்தில் மறைக்கப்பட்டு கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 16 மாடுகள் வவுனியா கனகராயன்குளம் பகுதியில் பொலிஸாரிடம் சிக்கின. அவற்றைக் கடத்திச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது குறித்த வாகனத்தில் போலியான அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி மாடுகள் கடத்திச்செல்லப்பட்டுள்ளமை தெரியவந்தது. அதனையடுத்து வாகனத்தில் இருந்த நால்வரையும் கைதுசெய்த பொலிஸார் 16 மாடுகளையும் அவற்றை கடத்திச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட லொறி ஒன்றையும் மீட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் உரியநடைமுறைகளை பேணி கொண்டுசெல்லப்படாத நான்கு மாடுகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அவற்றைக் கொண்டுசென்றனர் என்று இருவரைக் கைதுசெய்திருந்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (கு-110)

# மோ. சைக்கிளை மறித்து தீ வைத்த விசமிகள்

## அல்வாயில் சம்பவம்



யாழ்ப்பாணம், மே 8
மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவர்களை வழிமறித்து, மோட்டார் சைக்கிளுக்கு தீ வைத்த சம்பவம், அல்வாய் சிறிலங்கா பாடசாலைக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

தீ காரணமாக மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியது.

இனந்தெரியாத நபர்கள் தாக்க முற்பட்டதோடு மோட்டார் சைக்கிளுக்குத் தீ வைக்க முற்பட்டதனால், மோட்டார் சைக்கிளில் பயணித்த அச்சுவேலியைச் சேர்ந்த இளைஞர்கள் இருவரும் தப்பியோடிவிட்டனர். இது பற்றி பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த குழுவினர் எதற்காக அவ்வாறு தாக்க முற்பட்டு தீ வைக்க முற்பட்டனர் என்பது தொடர்பில் அறியமுடியவில்லை. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (கு- 20)

# கிளிநொச்சி வளாகத்தின் கல்விச் செயற்பாடுகள் நிறுத்தம்

நாட்டில் எழுந்துள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள பொறியியல் பீடம், விவசாய பீடம், தொழில் நுட்ப பீடம் ஆகியவற்றின் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு, விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களை அவர்களின் வீடுகளுக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற கிளிநொச்சி வளாக பீடாதிபதிகளின் அவசர கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

எனினும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களையும் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மாணவர்களையும் அவர்களின் பரீட்சைகள் முடியும் வரை விடுதிகளில் தங்கியிருப்பதற்கு அனுமதிப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வளாகத்தில் அமைந்துள்ள குறித்த பீடங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 500 மாணவர்கள் விடுதிகளில் தங்கி கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். இவர்கள் அனைவரும் சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே விடுதிகளில் தங்கி கல்விச் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் கிரமமாக எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை இவர்களில் எந்தவொரு தொற்றாளரும் அடையாளப்படுத்தப்படவில்லை. ஆனாலும் வடக்கு மாகாணத்திலும், நாடெங்கிலும் எழுந்துள்ள நிலைமைகளை அடுத்து மாணவர்களை வீடுகளுக்கு அனுப்புவதற்கு பீடாதிபதிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பரீட்சைகளுக்குத் தோற்றும் தொழில் நுட்ப பீடத்தைச் சேர்ந்த இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்கள் 205 பேரும், பொறியியல் பீடத்தின் இறுதியாண்டு மாணவர்கள் 125 பேரும், விவசாய பீடத்தைச் சேர்ந்த 140 பேருமாக 470 மாணவர்கள் மட்டும் அவர்களின் சுய விருப்பின் பேரில் விடுதிகளில் தங்கி அத்தியாவசியமான பரீட்சைத் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இன அழிப்பு கல்வி வாரத்தை சட்டமாக்கியது கனேடிய மாகாண அரசு

ஈழத்தில் இன அழிப்பு நடந்ததற்கு மற்றோர் அங்கீகாரம்

ஒன்ராறியோ, மே 8

கனடாவின் 'ஸ்காபாரோ றூஜ் பார்க்' தொகுதிக்கான ஒன்ராறியோ மாகாண அரசு, தமிழ் இன அழிப்பு கல்வி வாரச் சட்ட வரைவை, ஒரு சட்டமாக நிறைவேற்றியுள்ளது. இதன் மூலமாக தமிழின அழிப்பு இலங்கையில் நடைபெற்றுள்ளது என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது வரலாற்று நிகழ்வாகும் என்று கனேடிய தமிழர் தேசிய அவை குறிப்பிட்டுள்ளது.

ஒன்ராறியோ சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் முன்வைத்த குறித்த சட்ட வரைவு, நேற்றுமுன்தினம் மூன்றாவது வாசிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே இது சட்டமாக்கப்பட்டது.

இது குறித்து கனேடிய தமிழர் தேசிய அவை குறிப்பிட்டுள்ளதாவது:

ஒவ்வொரு ஆண்டும் மே 18 ஆம் திகதியுடன் முடிவடையும் ஏழு நாள்கள் தமிழ் இன அழிப்பு கல்வி வாரமாக அறிவிக்கப்படும். இந்தக் காலகட்டத்தில் அனைத்து ஒன்ராறியோ மக்களும் தமிழ் கனேடியர்களின் வரலாற்றை அறிய வாய்ப்பு கிடைக்கும். இந்த சட்ட மசோதா உயிரிழந்த மக்களுக்கான மரியாதையை வழங்குவது மட்டுமல்லாமல் வாழ்வு முழுவதும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் எமது மக்களுக்கு நம்பிக்கையை கொடுத்து அவர்களை குணப்படுத்தும் என்ற நம்பிக்கையைக் கொடுக்கின்றது.

தமிழ் இனப்படுகொலையை அங்கீகரிப்பதன் மூலம் மனித இனத்துக்கு எதிரான இத்தகைய குற்றங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க தமிழ் இனப்படுகொலை மற்றும் பிற இனப்படுகொலைகள் குறித்த விழிப்புணர்வைப் பேணுவதோடு இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கான எங்கள் கூட்டு முயற்சியையும் உறுதிப்படுத்துகின்றது.

இந்த மசோதாவை மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் அறிமுகப்படுத்திய போது, தமிழ் மக்கள் அனைவரும் இணைந்த சமூகமாக மாகாண அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்களை ஆதரவாக ஒன்று திரட்டியிருந்தோம். இந்த ஆதரவை உறுதிப்படுத்தும் முயற்சியில் கனேடியத் தமிழர் தேசிய அவை, கனேடியத் தமிழ் இளையோர் மற்றும் தமிழ் இளையோர் அமைப்பு ஒருங்கிணைந்து இந்த வேலைத்திட்டத்தை வழிநடத்தியது. எங்கள் தொடர்ச்சியான கூட்டு முயற்சியில் கனடாத் தமிழ்க் கல்லூரி, அறிவகம் கனடா, மிஸ்ஸிசாகா தமிழ் ஒன்றியம், பிராம்டன் தமிழ் ஒன்றியம், மார்க்கம் தமிழ் ஒன்றியம், ஸ்காபரோ தமிழ் ஒன்றியம், ஒட்டாவா தமிழ் ஒன்றியம் மற்றும் க்யூபெக் தமிழ் ஒன்றியம் உட்படமேலும் பல தனி நபர்கள் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்கள் இந்த முயற்சியில் பங்கேற்றனர்.

இனப்படுகொலையாளிகள், இனப்படுகொலையை மறுப்பவர்கள் மற்றும் தனிப்பட்ட லாபம் கருதி நிற்பவர்களிடம் இருந்து தொடர்ச்சியான எதிர்ப்பு இருந்தும், மேலும் இலங்கை அரசின் கடுமையான எதிர்ப்பைக் கடந்தும் இந்தச் சட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த மசோதா, ஒன்ராறியோ அரசின் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் எமது சமூகத்தினதும் ஒரு கூட்டு முயற்சியாகும். ஒன்ராறியோ நாடாளுமன்றத்தில் இந்த சட்ட மசோதா நிறைவேறுவதற்கு முழு ஆதரவையும் வழங்கிய ஒன்ராறியோ பிரதமர், அமைச்சரவை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்துத் தரப்பினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். - என்றுள்ளது. (த-இ)

# வர்த்தக நிலைய ஊழியர்கள், கோவில் நிர்வாகி தனிமையில்

பருத்தித்துறையில் சுகாதாரத் தரப்பு அதிரடி

பருத்தித்துறை,மே 8

கொவிட் கட்டுப்பாடு மற்றும் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிச் செயற்பட்டனர் என்றுகூறி கோவில் நிர்வாகி, இ.போ.ச. பஸ் ஒன்றின் சாரதி மற்றும் வர்த்தக நிலைய ஊழியர்கள் உட்பட 13 பேர் கட்டாய சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம், பருத்தித்துறையில் நேற்று இடம்பெற்றது.

பொது சுகாதார பரிசோதகர்களான ஜென்சன் றொனால்ட் மற்றும் சுதாகரன் ஆகியோர் தலைமையில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் கிராம அலுவலர்கள் ஆகியோர் குழுவாக பருத்தித்துறை பகுதியில் அதிரடியாக கொரோனா கட்டுப்பாட்டு பரிசோதனைகளை மூன்று நாள்களாக முன்னெடுத்து வருகின்றனர். நேற்று பருத்தித்துறையில் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அதன்போதே, கொவிட் - 19 சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்டனர் என்று அவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, கோவில்களில் மக்கள் ஒன்றுகூட இடமளிக்க வேண்டாம் என்ற கட்டுப்பாட்டை மீறியதோடு, பக்தர்கள் முகக் கவசங்களை உரிய முறையில் அணியாமல் பூசை நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தமையும் தெரியவந்தது. அதனால் குறித்த கோவிலுக்குப் பொறுப்பான நபர் ஒருவர் 14 நாள்களுக்கு கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார்.

அத்துடன் நெல்லியடி பகுதியூடாக பருத்தித்துறை நோக்கி முகக்கவசம் அணியாது பஸ்ஸைச் செலுத்திச் சென்ற இ.போ.ச. சாரதி ஒருவரும் விசாரணையின் பின்னர் தனிமைப்படுத்தப்பட்டார்.

மேலும் பருத்தித்துறை வர்த்தக நிலையங்களில் முகக்கவசத்தை முறையாக அணியாத வர்த்தகர்கள் 11 பேரும் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

மேலும் வாடிக்கையாளர்களின் வருகைப்பதிவுகளை முறையாக பேணாமலும் முகக்கவசத்தை அணியாமலும் சிகை அலங்கரிப்பில் ஈடுபட்டார் என்றுகூறி ஒருவர் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார். நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் மற்றும் அதனால் ஏற்படும் இறப்புக்கள் நாளுக்குநாள் அதிகரித்துவரும் நிலையில் பொதுமக்கள் பொறுப்பற்றவிதமாக செயற்படுவதால் நாடு மிக மோசமான நிலையை நோக்கி நகர்கின்றது என்று சுகாதாரத் தரப்பு தெரிவிக்கின்றது. (த-9)

முல்லையில் 16 பேருக்கு தொற்று;

# வற்றாப்பளை கண்ணகியில் நேர்த்திக் கடன் செய்யத் தடை

மாவட்டச் செயலர் அறிவிப்பு

முல்லைத்தீவு, மே 8

முல்லைத்தீவில் 16 பேர் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்கள். இதனால் அரச சுற்றறிக்கைகளுக்கு அமைவாக, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் இந்தவருடம் பக்தர்கள் நேர்த்திக்கடன் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. மக்கள் இதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போதைய கொவிட் 19 நிலைமைகள் தொடர்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

மாவட்டத்தில் 16 பேர் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்கள். 101 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். மாங்குளம் தள மருத்துவமனையில் சிற்றூழியராக பணியாற்றிய ஒருவருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து தொடர்புடைய 12 பேர் கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து மாங்குளம் மருத்துவமனையில் மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட பொதுமக்கள் தேவையின்றி அநாவசியமாக வீதிகளில் செல்வதைத் தவிர்க்க வேண்டும், அத்தியாவசியமாக வெளியில் வரும் போது முகக்கவசம் அணிந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். கடந்த காலங்களில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் குறைந்திருந்தாலும் தற்போது அதிகரித்து வருகின்றனர். எனவே மக்கள் பொது இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளவும். தற்போது பரவிவரும் கொவிட் தொற்று காரணமாக வற்றாப்பளை அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வை பெருமெடுப்பில் இல்லாமல் சாதாரண பூசையாகச் செய்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. கிரியைகள் செய்கின்ற பூசகர்களும், நிர்வாகத்தினரும் மட்டும் கலந்துகொண்டு உற்சவத்தை நடத்துமாறு கோரப்பட்டுள்ளது. நேர்த்திக்கடன்களை செய்வதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது. இதற்கு பக்தர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றார். (ப-19)

# நாட்டை முடக்குங்கள்

சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 8

இந்தியாவில் ஏற்பட்டுள்ள கொரோனா அபாய நிலைமை, இலங்கையிலும் ஏற்படாதிருக்க சுகாதாரத் தரப்புகளின் அறிவுரையைப் பின்பற்றி நாட்டை முடக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 தாக்கம், அதனால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் மன வேதனையை ஏற்படுத்துகின்றன. அவ்வாறான நிலையொன்று இலங்கையில் ஏற்படக்கூடாது. நாட்டின் ஜனாதிபதி கொவிட் - 19 தொற்றைத் தடுப்பதற்கு ஊசி தான் ஒரே வழி என்று கூறுகிறாரே தவிர சுகாதார தரப்புகளின் கோரிக்கையை ஏற்று நாட்டை முடக்குவதற்குத் தயாரில்லை.

நாட்டின் பொருளாதாரம் எவ்வளவு முக்கியமோ அதற்கும் மேலாக மக்களுடைய உயிர் முக்கியம். இதனை அதிகாரத்திலிருந்து முடிவு எடுப்பவர்கள் நன்கு உணர வேண்டும்.

தற்போது இலங்கையில் கொவிட் தொற்றாளர்கள் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில் இறப்புக்களின் வீதமும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆகவே கொவிட் தொற்றிலிருந்து பாதுகாப்புதற்கு ஊசி போடுவதை விட சுகாதாரத் தரப்புக்களின் கோரிக்கையை ஏற்று நாட்டை முடக்குவதே சிறந்தது. - என்றார். (த-20)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

## யாழ்ப்பாணக் கல்லூரி

**விஞ்ஞானப் பிரிவு**
கோ.சங்கிராணி 2ஏ பி, நிதுர்சரன் 2ஏ சி,யோ.சானுயன் ஏ 2பி, வி.ஜெனார்தனி ஏ பி சி, யோ.லேக்கா 2பி சி, ஏ.லவகீசன் 2பி சி, அ. டிலோதமன் 2பி சி, சா.கஜநாத் பி 2சி, ப.சாரங்கி பி 2சி, ரா.விக்டோர் ஜெயக்குமார் ஏ 2சி, சோ.யூதி பி 2சி

**கணிதப் பிரிவு**
சி.கஜானன் 2ஏ சி, ரா.சுவஸ்கரன் 2ஏ சி, ய.அபிராஜ் ஏ பி சி, அ.ரஜீவன் 2பி சி, பா.துசாகரன் 2பி சி,ச.தனுஜன் 2பி சி, சி.சௌவ்மிகா பி 2சி, பே.சங்கவி பி 2சி, நி.மயூரா பி சி எஸ்.

**வர்த்தகப் பிரிவு**
க.மாதங்கி 3ஏ, ச.சயனுயா 3ஏ, வி.பிரசாமினி 2ஏ பி, பா.பானுஜா ஏ பி சி, ம.சிந்துஜன் ஏ பி சி.

**கலைப் பிரிவு**
தோமஸ்தி 2ஏ பி, த.சாலினி பிரின்யஸ் 2ஏ பி,ச.கஜானி ஏ 2பி, அ.கிருசலா 3பி, வி.கோசிகன் 2பி சி,ரா.ரக்சனா ஏ பி சி, வி.பிரசாலினி ஏ 2சி.

## மானிப்பாய் இந்துக் கல்லூரி

**பொறியியல் தொழில்நுட்பம்**
செ.டிலக்சன் 2பி சி, கௌ.ஹரிதரன் 3பி, ஜெ.டிலக்சன் 2பி சி, இ.யோகதாஸ் பி சி எஸ், கி.கவிராஜ் ஏ சி எஸ், வி.நேசராஜ் 2பி சி.

**உயிர் முறைகள் தொழில்நுட்பம்**
ச.ஜிகிர்தா 2பி சி.

**பௌதீக விஞ்ஞானம்**
இ.சிவஜன் ஏ 2பி, இ.பிரகாஸ் 2ஏ சி, கௌ.ஜதுர்சன் ஏ 2சி, ர.டிலக்சன் 2பி சி, சி.கயூரன் ஏ சி எஸ்.

**கலைப்பிரிவு**
யே.சானுயன் ஏ 2பி, யே.அபிக்நயன் ஏ பி சி, கு.பிரதீபன் ஏ பி சி.

**வர்த்தகப் பிரிவு**
கி.ஜெயப்பிரணவசர்மா 2பி சி

## சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி

**கணிதப் பிரிவு**
வி.மதுசாளினி 2ஏ பி, சு.அனுசன் 2ஏ சி, க.சியாமளன் (ஆங்கிலமொழி மூலம்) ஏ பி சி, ப. பவித்திரா ஏ சி எஸ், ச. சுகன்யா பி 2சி, ம.கேசிகன் பி 2சி, சு.கஜீவன் ஏ 2எஸ்,

**விஞ்ஞானப் பிரிவு**
த. நிர்சனா. 3பி சி, ச. மதுகரி பி 2சி, கி.அபிராமி பி சி எஸ்,

**வர்த்தகப்பிரிவு**
ஆ. திவ்வியா ஏ பி சி, யோ.காவியன் 3பி, கு. கிருஜன் 3பி, த. கபிலமன் 2பி சி, ம.கிருபா ஏ பி சி,

**கலைப்பிரிவு**
க.தமிழ்வாணி 2ஏ பி, கு.ஆரணி 2ஏ பி, து.கம்சாயினி 2ஏ பி, தே.சுகன்ஜா 2ஏ சி,கோ.சிவலக்சி ஏ பி சி, கி.சுவேனியா ஏ 2பி, ர. துசீபா 3பி, ச.கதுர்சனா ஏ.பி.சி, யோ.கதுர்சனா 2பி சி,எஸ்.தவச்செல்வம் 2பி சி, கு. திருமாறன் 2பி சி, தேவரமணன் கோசலா ஏ 2சி, ம. நிலானி ஏ 2சி, சி.மதுலா 2பி சி,இ.கலைமதி ஏ பி சி, கு.கிருஜா பி 2சி, இ. றொசானி 2பி சி, பூ. சாலினி 2பி சி, பு.சிவானுஜா பி 2சி, த. வினோஜா ஏ பி எஸ்.

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**பொறியியல் தொழில்நுட்பம்**
கோ.பானுஜன் - பி2சி,இ.பிரணவன் - பி2சி, சு.சன்ஜீத் - 3சி, ச.அர்சுதன் - 2சிஎஸ், நா.அருண் - 2சிஎஸ்

**உயிரியல் தொழில்நுட்பம்**
ந.கிஸான் - ஏ2சி, பா.கனிஸ்தியா - பி2சி, இ.மிதிலா - 3சி, ஞா.அருந்துசா- பி2சி, நே.டக்சிதா - 3சி, சி.உதயகரன் 3 சி, சி.ரோகினா - 2சிஎஸ்.

**பௌதீக விஞ்ஞானம்**
த.சுந்தரபவன் - 3ஏ, சி.நிரோசன் - 3ஏ, த.குபேரன் - 2ஏபி, ஏ.துவாரகி - ஏ2பி, ம.கங்காதீபன் - ஏபிசி,ர.ஆருசன் - 2பிசி, செ.அஜித்தா - ஏபிசி,வ.விதுசன் - ஏ2சி,மௌ.சானுகா - 2பிசி, இ.அகலீசன் - ஏபிசி,கி.ஜன்கரன் - ஏபிசி,சி.பகீதன் - 2பி சி, சு.கீர்த்தன்சனா - பிசிஎஸ்,ம.எழில்வேந்தன் - 3சி, அ.சுவேதா - பிசிஎஸ், க.தேனுசன் - 3சி,சி.அஜன்தன் - பி2சி, இ.இரவிராஜ் - 3சி, தெ.சாருஜா - 3சி,ஆ.நிஜாநந் - 2ஏபி (பழைய பாடத்திட்டம்), ந.ஆதுஜன் - ஏ2சி (பழைய பாடத்திட்டம்),இ.தனகரன் - ஏபிசி (பழைய பாடத்திட்டம்)

**வர்த்தகப் பிரிவு**
சி.சஜீதன் - 3ஏ, கி.சுதர்சன் - 3ஏ, பி.குஜின்சா - 3ஏ, பூ.அனுசியா - 3ஏ, வீ.மதிநிலா-2ஏபி,ச.சிந்துஜன் - 3ஏ, வி.சிந்துசன் - 3ஏ, மு.தேனுஜா - 2ஏபி,தி.கோணேஸ்வரன் - 2ஏபி,நா.அருண்சங்கர் - ஏ2பி,ப.வேனுகா - 2ஏபி, ம.துளசிகா - ஏபிசி, ம.ஆதித்தனா - ஏ2பி, சி.தாரகா - 3பி, த.சுணைனா - ஏபிசி, சு.லிலக்சன் - 3பி, க.இந்துசா - ஏ2சி

**கலைப் பிரிவு**
ச.நிலானி - 3ஏ, க.ஜினோஜா - 3ஏ, த.அஜித்தா - 3ஏ, கு.கம்சா - 3ஏ, ப.சௌமியா - 2ஏபி, அ.சர்மிளா - 3ஏ, வி.பிரியங்கன் - 2ஏபி, ஜெ.மிதுர்சிகா - ஏ2பி,கு.லக்சியா - ஏபிசி,ம.கீதாஞ்சலி - 2பிசி,ச.வாசகன் - ஏ2பி,ம.மிதுர்சா - ஏ2பி,சி.கயல்விழி - 3பி, ந.துசியா - ஏ2பி, நா.பரஜோதிகா - 2பிசி,க.பிரதீபன்-3பி ச.கீர்த்தனா - ஏ2சி, ந.வாமினி - ஏபிஎஸ்.



வெளியான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் விஞ்ஞானப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை 4 ஆம் இடத்தை பெற்றுள்ளது. சகாயநாதன் டிலோஜன் என்ற மாணவனே மாவட்ட மட்டத்தில் நான்காம் இடத்தை பிடித்துள்ளார். (ஐ-60)

## சித்திபெற்ற மாணவருக்கு தங்க மோதிரங்கள் அன்பளிப்பு

வெளியான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்ற மாணவர் இருவருக்கு வர்த்தகர் ஒருவர் தங்க மோதிரங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். உயிரியல் தொழில்நுட்பப் பிரிவில் 2 ஏ பி பெறுபேற்றைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தைப்பெற்ற கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவி கயலினிக்கும், பொருளியல் தொழில்நுட்பப் பிரிவில் 2ஏ பி. பெறுபேற்றை பெற்று மாவட்ட ரீதியில் முதலாமிடத்தை பெற்ற கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவன் தமிழ் மாறனுக்குமே தங்க மோதிரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ஐ-12)

## வணிகப் பிரிவில் முதல் நிலையில் மன். சவேரியார் பெண்கள் பாடசாலை

மன்னார்,மே

வெளியான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வணிகப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை முதலிடத்தை பெற்றுள்ளது. செபஸ்ரியாம் பிள்ளை மேரி ஜெனிஸ்ரா என்ற மாணவியே மூன்று பாடங்களிலும் ஏ சித்தியை பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தை பிடித்துள்ளார். இதேவேளை குறித்த பாடசாலையைச் சேர்ந்த செபமாலை டல்மேடா செரின் என்ற மாணவி விஞ்ஞானப் பிரிவில் 2ஏ பி பெறுபேற்றைப் பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ஐ-56)

## வறுமையிலும் சாதனை படைத்த முல்லைத்தீவு மாணவி



முல்லைத்தீவு, மே

வெளியான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கலைப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயம் முதலிடத்தை பெற்றுள்ளது.

சிவகுமாரன் மதுரா என்ற மாணவியே மாவட்ட மட்டத்தில் முதலிடத்தை பிடித்துள்ளார்.

குறித்த மாணவி யூடோ போட்டியில் மாகாணம் மற்றும் தேசிய மட்டத்தில் கலந்து கொண்டுள்ளதுடன் வேறு இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தனியாகவும் குழுவாகவும் பங்குபற்றி பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவி கருத்து தெரிவிக்கையில்,"எனது குடும்பம் வறுமையானது. எனது தந்தை சாரதியாக பணிபுரிகின்றார். என்னையும் தம்பியையும் படிக்க வைப்பதற்கு அன்றாடம் அம்மா, அப்பா படும் கஷ்டங்களை எனது கண்களினூடாக பார்த்துள்ளேன்.

ஆதலால் அவர்களுக்கு நான் கௌரவத்தினைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் படிப்பில் ஆர்வத்துடன் ஈடுபட்டேன். அதற்கான பலனையும் தற்போது பெற்றுள்ளேன். நான் இன்று இந்த நிலைக்கு வருவதற்கு வழிகாட்டியாக இருந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்" எனத் தெரிவித்தார். (ஐ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சட்டங்கள் எதற்குள்ளன?

யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்குள் கடந்த இரு தினங்களுக்கு முன்னர், கொரோனாப் பெருந் தொற்றைத் தவிர்ப்பதற்காக - எதிர்த்துப்போராடுவதற்காக மாஸ்க் அணியாதவர்களை பொலிஸார் நடத்திய விதம் யாவரும் அறிந்ததே. மாஸ்க் அணியாதவர்கள் அனைவரும் 'குண்டுக்கட்டாக' பொலிஸாரால் தூக்கிச்செல்லப்பட்டு அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொலிஸ் வாகனத்துக்குள் ஏற்றப்பட்டனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கை சரியா? தவறா? என்ற விவாதம் தற்போது எழுந்துள்ளது. சமூக வலைத்தளங்களில் எல்லாம் தற்போது இதான் பேசுபொருள்.


கொரோனா என்பது ஒரு பெருந்தொற்று. அதன் கனதியை அனைவரும் உணர வேண்டும். மாஸ்க் அணியுங்கள், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுங்கள், சமூக இடைவெளியைக் கடைப்பிடியுங்கள் என்று நாளுக்குநாள் சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்திக்கொண்டிருக்கையில், அதைப் பற்றி சிறிதும் சட்டை செய்யாமல் மெத்தனப் போக்குடன் அதிலும் பெருந்தொற்று அதிகம் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் நடமாடித் திரிந்தமை தவறு. பொலிஸாரின் மேற்படி நடவடிக்கைக்கான சூழ்நிலையை - ஏதுநிலையை நாம் தான் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். அதில் இரண்டாம் கருத்துக்கோ சமாளிப்புக்களுக்கோ இடமில்லை. ஆனால், பொலிஸாரின் நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்பட்ட 'வடிவம்' தவறு. கண்டிக்கப்பட வேண்டியது.

முகக்கவசம் அணியாதவர்களுக்கு நீதிமன்றத்தின் வாயிலாக தண்டம் முதல் சிறைத்தண்டனை வரை விதிக்கக்கூடிய சட்ட ஏற்பாடுகள் தற்போது நடைமுறையில் உள்ளன. இவ்வாறிருக்கையில் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரை நடத்துவதைப் போலவும், கொலைக் குற்றவாளியைக் கைதுசெய்வது போலவும் பொலிஸார் நடந்துகொண்ட முறைக்கு வலுவான கண்டனங்களைப் பதிவுசெய்துதான் ஆக வேண்டும்.

காரணம், இந்த 'குண்டுக்கட்டுத் தூக்கல்' நடைமுறை இத்துடன் நின்றுவிடப் போவதில்லை. எதிர்காலத்தில் தமிழர் பகுதிகளில் ஏதேனும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் இடம்பெற்றால் இதே நடைமுறையைப் பின்பற்றி தமிழர்களின் குரல்களை அடக்குவதற்குரிய வாய்ப்புக்கள் உள்ளன. அதுவும் தற்போதுள்ள அரசின் ஆட்சிக்காலத்தில் அத்தகைய வாய்ப்புக்கள் மிகை அதிகம். அதற்குரிய ஒத்திகை என்று இந்தக் 'குண்டுக்கட்டுத் தூக்கலை' கருதினாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமே இல்லை.

முகக் கசவம் அணியாதவர்களை குண்டுக்கட்டாகக் கொண்டுசென்று எச்சரிக்கை செய்து விடுவிப்ப தைக் காட்டிலும், நீதிமன்றங்களின் வாயிலாக, நாட்டில் தற்போது நடைமுறைகளில் உள்ள சட்ட ஏற்பாடுகளின் வாயிலாக விட்டுக்கொடுப்பற்ற மற்றும் இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டு தண்டனைகளை வழங்குவதன் மூலம் கூடுதலான விழிப்புணர்வை மேற்கொள்ள முடியும். 'குண்டுக்கட்டுத்தூக்கல்'தான் கொரோனாவை விரட்டுவதற்கான வழிமுறை என்றால், பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக சிறப்பாகப் பிறப்பிக்கப் பட்டுள்ள சட்டங்கள் எதற்கு? சட்ட நடைமுறைகள் எதற்கு? நீதிமன்றங்கள் எதற்கு?.

எமக்கு இப்போது தேவை பெருந்தொற்றில் இருந்து நீட்சியான பாதுகாப்பே தவிர, 'சீன்' காட்டும் கேலிக்கூத்துகளல்ல.




# ஒரே நேரத்தில் 100 தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்க மன்னாரும் தயார்

**மன்னார், மே 8**

**மன்னார் மாவட்டத்தில் ஒரே நேரத்தில் 100 கொவிட் நோயாளர்களை அனுமதித்து சிகிச்சை வழங்கும் விசேட சிகிச்சை நிலையத்தை இராணுவத்தினர் தயார்செய்து வருகின்றனர்.**



மன்னார் தாரபுரம் பகுதியில் அமைந்துள்ள துருக்கி சிட்டி பாடசாலையை மாவட்டச் செயலர் பொறுப்பேற்றுள்ள நிலையில், இராணுவத்தின் உதவியுடன் அந்தப் பாடசாலையை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

குறித்த சிகிச்சை நிலையம் ஒரே நேரத்தில் 100 கொவிட் தொற்று நோயாளர்களை அனுமதித்து சிகிச்சை வழங்கும் வகையில் தயார் செய்யப்பட்டு வருகின்றது. அந்த நிலையத்தில் மன்னார் சுகாதாரத் துறையினர் சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தலைமையிலான குழுவினர் நேற்று மதியம் குறித்த சிகிச்சை நிலையத்தின் பணிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். மன்னார் மாவட்டத்தில் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மாவட்டங்களில் உள்ள சிகிச்சை நிலையங்களில் அனுமதிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-56)

# நாடாளுமன்ற ஜனநாயகம் அறியாதவரா சரத் வீரசேகர?

## ஹேஷா விதானகே சீற்றம்

கொழும்பு, மே 8

நாடாளுமன்ற ஜனநாயகம் தொடர்பில் சிறிதளவிலாவது அமைச்சர் சரத் வீரசேகர அறிந்திருந்தால், ரிஷாத் விடயத்தில் இவ்வாறு நடந்து கொள்ள மாட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தனது தேவைக்கேற்ற வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களை சிறையிலடைத்து, மூன்று மாதங்கள் அவர்களை நாடாளுமன்றுக்குள் வரவிடாமல் தடுத்து, அவர்களது உறுப்புரிமையை நீக்குவதிலேயே அரசு மும்முரமாகவுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரிஷாத் பதியூதீன் நாடாளுமன்றுக்குள் வருவதற்கு இடமளிக்கக் கூடாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறுகின்றார். இது ஜனநாயகத்தின் மீது மேற்கொள்ளப்படும் பாரதூரமான தாக்குதலாகும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்டோர் முன்னிலையில், அமைச்சர் சரத் வீரசேகர அரசின் நிலைப்பாட்டையல்லவா தெரிவிக்கின்றார்? மக்கள் பிரதிநிதியான ரிஷாத் பதியூதீனின் உறுப்புரிமையை கேள்விக்குள்ளாக்கி, நாடாளுமன்றத்தில் அவருக்குக் காணப்படும் வரப்பிரசாதங்களை இல்லாமலாக்குவதற்கான வாய்ப்பு சபாநாயகருக்கு கிடையாது. அதற்கான சம்பிரதாய உரிமையும் கிடையாது - என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

**மேடம்**: நிதி விஷயங்களில் இருந்த சிக்கல்களை ஒழுங்கு செய்வீர்கள். உறவினர் நட்புக்கரம் நீட்டுவர். மனதில் இருந்த குழப்பங்கள் தீரும். எதிர்பாலினத்தவரால் நன்மை உண்டு.

**இடபம்**: முன்னேற்றத்தில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். பிள்ளைகளின் பழக்க வழக்கங்கள் அனைத்தும் நிம்மதியளிக்கும். பணி பற்றிய விஷயங்கள் திட்டமிட்டதைவிடவும் தாமதமாகும்.

**மிதுனம்**: பழைய பகை ஒன்றைப் பேசித் தீர்த்துக்கொள்வீர்கள். நம்பிக்கை அதிகரித்து நிம்மதி பிறக்கும். தேவை நிறைவேறும். கவலையற்ற நாள். புதிய நபரிடமிருந்து நற்செய்தி வரும்.

**கடகம்**: பொறுப்புடன் பேச வேண்டும். பலகாலத் திட்டம் நிறைவேறும். கூடுதல் உழைப்பு தேவைப்படும் நாள். மனம் நிறையும். மனைவியின் உடல் நலம் சிறப்பாக இருக்கும்.

**சிம்மம்**: மகிழ்ச்சியான அனுபவங்களைப் பெறுவீர்கள். பொழுது போக்கு உண்டு. கலகலப்பான நாள். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு உண்டு.

**கன்னி**: சொல்லிலும் செயலிலும் கவனம் தேவை. மகிழ்ச்சி கூடும். பெருமிதம் கிட்டும். பிள்ளைகளின் சாதனை மகிழ்ச்சி தரும். வாழ்க்கைத்துணையின் சிரமங்களைக் குறைப்பீர்கள்..

**துலாம்**:பயம் ஏற்பட்டு விலகும். தவறு செய்யாமல் இருங்கள். மற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்க்கவும். விரைவில் சுபச்செலவுகள் ஏற்படுவதற்கான அறிகுறி தெரியும்.

**விருச்சிகம்**: பணியாளர்களின் பேச்சினால் அலுவலகத்துக்கு நன்மை விளையும். பிள்ளைகள் பற்றி உங்களுக்கிருந்த கவலைகள் நீங்கும். நிதி நிலைமை பற்றிய பிரச்சினை தீரும். நட்பு வட்டம் விரியும்.

**தனுசு**:சிறு கவலை ஏற்பட்டு உடனே விலகும். கலை ஆர்வம் வரும். கடனை அடைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். பிரச்னையிலிருந்து மீளுவீர்கள். புதிய துறையில் ஆர்வம் வரும்.

**மகரம்**: சிரமப்படும் ஒருவருக்கு உதவிகள் செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினரின் நடவடிக்கை காரணமாக கவலை ஏற்படக்கூடும். உங்களின் பணிகளை நேர்த்தியாக செய்து முடித்து மகிழ்வீர்கள்.

**கும்பம்**:சிறு கவலை ஏற்பட்டு உடனே விலகும். கலை ஆர்வம் வரும். கடனை அடைக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். பிரச்னையிலிருந்து மீளுவீர்கள். புதிய துறையில் ஆர்வம் வரும்.

**மீனம்** :முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும். வரவுக்கு மீறிய செலவு உண்டு. வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும் நாள். வரவு திருப்தி தரும். அலைச்சல் ஏற்படும். உழைப்பிற்கேற்ற நல்ல பலன் கிடைக்கும்..







# அகல் விளக்கை
## எந்தெந்த திசையில் ஏற்றினால் நன்மைகள்



தினமும் அகல் விளக்கு ஏற்றும் பழக்கத்தை பல வீடுகளில் காண முடியும். ஆனால், அகல் விளக்கை எந்தெந்த திசையில் ஏற்றினால் என்னென்ன நன்மைகள் மற்றும் எந்த திரிகளை கொண்டு ஏற்றினால் என்ன பலன்கள் என்பதை பார்ப்போம்.

**திசைகள்:**
அகல் விளக்கை கிழக்கு திசையில் ஏற்றினால் உங்களை பின்தொடரும் துன்பங்கள் நீங்கும், சமூகத்தில் நல்ல மதிப்பும், பெயரும் கிடைக்கும் என கூறப்பட்டுள்ளது.
மேற்கு திசையில் அகல் விளக்கை ஏற்றினால், உறவுகளின் மத்தியில் ஒற்றுமை அதிகரிக்கும். வீட்டில் உள்ள கடன் தொல்லைகள் விளகும். வடக்கு வடக்கு திசையில் அகல் விளக்கை ஏற்றினால் வீட்டில் மங்களகரமான செயல்கள் நடக்கும், செல்வம் பெருகும், மகிழ்ச்சி நிறையும். தெற்கு திசையில் அகல் விளக்கை ஏற்றினால் எதிர்பாராத தொல்லைகள், கடன் சுமை மற்றும் எதிர்மன்ற தாக்கங்கள் வீட்டில் அதிகரிக்கும் என கூறப்பட்டுள்ளது.

**திரிகள்:**
பஞ்சு திரி பயன்படுத்தி விளக்கு ஏற்றுவதால் வாழ்க்கையில் சுபம் கூடும்.
தாமரை தண்டு திரி பயன்படுத்தி விளக்கு ஏற்றினால் முன் பிறவி பாவங்கள் அகலும், செல்வம் பெருகும்.
வாழை தண்டி திரி பயன்படுத்தி விளக்கு ஏற்றினால் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

# ஐந்தறிவுதானா சொல்லுங்கள்?

தமிழகத்தின் மதுரை மாவட்டத்தில் வீட்டு நாய் ஒன்று தினமும் பசுமாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் சென்று மீண்டும் வீட்டுக்கு அழைத்துவரும் செயல் காண்போரை வியப்பில் ஆழ்த்துகிறது.
மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள கிராமம் அன்னம்பார்பட்டி. அங்கு வசிக்கும் விவசாயி ஒருவரின் வீட்டிலேயே இந்த வினோதம் இடம்பெறுகின்றது.
குறித்த விவசாயி ஆடுகள், மாடுகள் என சில கால்நடைகளை வளர்க்கின்றார். அந்த விவசாயி தனது 3 பசுமாடுகளை மேய்ச்சலுக்காக சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தனது தோட்டத்துக்குத் தினமும் காலையில் அழைத்துச் செல்வார். அப்போது அவருடன் நாயும் உடன் செல்லும். தன்னுடைய எஜமானர் பசுமாட்டை கயிறுகட்டி அழைத்துச் செல்வதை கவனித்த நாய் ஒரு கட்டத்தில் பசுமாட்டை தானேபிடித்துச் செல்ல முயற்சி செய்த நிலையில் அந்த முயற்சியில் வெற்றி பெற்றது. இப்படியே படிப்படியாக மாடுகளை மேய்க்கும் வேலையை நாய் முழுமையாகச் செய்யத் தொடங்கிவிட்டதாம்.
தற்போது அந்த விவசாயி தனது ஆடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தால், மாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்லும் பணிகளை நாய் கவனிக்கின்றதாம்.



# சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 9 | | 3 | | 4 | 6 |
| | | 3 | | 5 | | | | |
| | | | 4 | | | | | 2 |
| 4 | | | | | | 1 | | |
| | 8 | | | | | | | |
| | 5 | | | | 9 | 7 | | |
| | | | 1 | | | | | 9 |
| | 1 | | | | 8 | 4 | | |
| 8 | 2 | | | 4 | | | 6 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 7 | 2 | 6 | 8 | 1 | 4 | 3 |
| 2 | 8 | 1 | 3 | 9 | 4 | 5 | 7 | 6 |
| 6 | 3 | 4 | 1 | 5 | 7 | 8 | 9 | 2 |
| 8 | 2 | 9 | 5 | 7 | 6 | 4 | 3 | 1 |
| 3 | 4 | 5 | 9 | 1 | 2 | 6 | 8 | 7 |
| 1 | 7 | 6 | 4 | 8 | 3 | 2 | 5 | 9 |
| 4 | 6 | 3 | 8 | 2 | 9 | 7 | 1 | 5 |
| 9 | 5 | 2 | 7 | 4 | 1 | 3 | 6 | 8 |
| 7 | 1 | 8 | 6 | 3 | 5 | 9 | 2 | 4 |

**விதி1:** ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுர அறையிலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்களும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இப்படியாக இதே விதி அமையுமாறு சட்டகத்திலே உள்ள எல்லா அறைகளும் (9 அறைகள்) அமைய வேண்டும்.

**விதி2:** சட்டகம் முழுவதிலும் ஒவ்வொரு வரிசையிலும் (கிடையிலும்) எண்கள் 1 முதல் 9 வரையில் உள்ள எண்கள் ஒருமுறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இதே போல ஒவ்வொரு நெடையிலும் எண்கள் 1 முதல் 9 வரை ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரிஷாத் சிறைக்குள், முஸ்லிம் மக்கள் வதைப்பு இப்தார் நிகழ்வில் பங்கேற்க வெட்கமில்லையா?

## முஸ்லிம் எம்.பிக்களை விளாசித்தள்ளும் ஐக்கிய மக்கள் சக்தி

**கொழும்பு, மே 8**

**கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்ட வரைவை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை அலரிமாளிகைக்கு அழைத்து பிரதமர் மஹிந்த ராஜ பக்ச இப்தார் நிகழ்வு நடத்தியுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமரால் அலரிமாளிகையில் இப்தார் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் பங்கேற்க முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ரிஷாத் கட்சி உறுப்பினர்கள் பங்கேற்றனர். எதற்காக இவர்களுக்கு இந்த அழைப்பு? உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம், கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டவரைவை நிறைவேற்று வதற்கு அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவைப்படலாம். அதற்கான ஆதரவை திரட்டுவதற்காகவா குறித்த முஸ்லிம்நாடாளுமன்ற உறுப்பினர்கள் அலரிமாளிகைக்கு அழைக்கப்பட்டனர் என்ற கேள்வி எழுகின்றது. ரிஷாத் பதியுதீன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்பதற்கு கூட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மறுபுறத்தில் முஸ்லிம் மக்கள் இந்த அரசால் வதைக்கப்படுகின்றனர். நிலைமை இப்படி இருக்கையில் குறித்த நிகழ்வில் பங்கேற்பதற்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வெட்கம் இல்லையா, ஆடை அணிந்து கொண்டா நிகழ்வில் பங்கேற்றனர் என கேட்க விரும்புகின்றேன், என்றார். (ஒ.44)



## ஐ.சி.யூக்கு

# ஆயிரம் தாதியர்களை உள்ளீர்க்க நடவடிக்கை

கொழும்பு, மே 8

கொரோனாத் தொற்றுப் பரவல் வேகம் அதிகரித்துள்ள நிலையில், அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்துச் செல்லும் சூழலில், உடனடியாக ஆயிரம் தாதியர்களை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு உள்ளீர்க்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் கொரோனா விடுதி மற்றும் கொரோனா அவசர சிகிச்சைப் பிரிவு என்பன தயார் செய்யப்படுகின்றன. அவசர சிகிச்சைப் பிரிவில் அனுபவமுள்ள தாதியர்களை, கொரோனா அவசர சிகிச்சைப் பிரிவுக்கு உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. (ஒ,5)

# சட்டமா அதிபருக்கு சஞ்சய பரிந்துரை

கொழும்பு,மே 8

புதிய சட்டமா அதிபர் பதவிக்கு, சஞ்சய ராஜரத்தினத்தின் பெயர் நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்டுள் ளது.

அடுத்த வாரம் நாடாளுமன்ற அமர்வில் இவரது நியமனம் தொடர்பான மனு பரிசீலிக்கப்படும் என்று சபாநாயகரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய சட்டமா அதிபர் தப்புல டிலிவேர எதிர்வரும் 20 ஆம் திகதி ஓய்வுபெறவுள் ளார்.

அவரது பதவிக்கு சஞ்சய ராஜரத்தினத்தின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது. அவர் தற்போது சட்டமா அதிபர் துறையின் சிரேஷ்ட அதிகாரியாகக் கடமையில் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-4)

# இரண்டாவது வருடமும் திருவிழாக்கள் ஸ்தம்பிதம்

## ஆலய நிர்வாகத்தினர் கவலை

சாவகச்சேரி, மே 8

கோவில்களில் இவ்வருடம், வருடாந்த உற்சவம் நடத்த அனுமதி கோரி வருபவர்களுக்கு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் அனுமதி வழங்க முடியாதென தெரிவிக்கப்படுகின்ற கடந்த வருடம் போன்று இவ்வருடமும் உற்சவங்கள் நடத்த முடியவில்லை என கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனா அச்சம் காரணமாக நாட்டில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதால் கடந்த வருடம் உற்சவம் நடத்த முடியவில்லை. இவ்வருடம் உற்சவத்தை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் தற்போதைய கொரோனா காலகட்டத்தைக் கருத்தில் கொண்டு திருவிழா நடத்த சுகாதாரப் பகுதியினர் அனுமதி வழங்க மறுத்து வருகின்றனர். இதனால் இவ்வருடமும் திருவிழா செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றனர்.

இது தொடர்பாக சுகாதார பகுதியினருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது;

கோவில் திருவிழா என்றால் ஊர் மக்கள் ஒன்றாகச் செய்யும் நிகழ்வாகக் கருதமுடியும். நாட்டில் கொரோனா மூன்றாம் அலை அதிகரித்து வரும் நிலையில் கோவில்களில் திருவிழாக்கள் நடத்த அனுமதி வழங்கினால் ஊர்மக்கள். திருவிழாவைக் காண திரண்டு வருவார்கள். அப்படி வருபவர்களைக் கட்டுப்படுத்த கோவில் நிர்வாகத்தினர் அல்லது திருவிழா உபயகாரர்கள் போன்றோரால் முடியாது. அத்துடன் தனது திருவிழா சிறப்பாக செய்ய வேண்டுமென்ற எண்ணம் உபயகாரகர்கள் மத்தியில் காணப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு மேலதிகாரிகளின் உத்தரவின் பிரகாரம் இவ்வருடம் திருவிழா செய்வதற்கு அனுமதி வழங்கவில்லை என்றனர். (ப-9)

# ஊழியர்களுக்கு தொற்று; ரயில்களுக்கு வேகவரம்பு

கொழும்பு,மே 8

ரயில்வே பராமரிப்பு பிரிவின் ஊழியர்கள் சிலர் கொரோ னாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ரயில்களில் மணித்தியாலத்துக்கு 30 கிலோமீற்றர் அல்லது அதற்கும் குறைவான வேக வரம்பைக் கடைப்பிடிக்க புகையிரதத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

ஊழியர்களுக்கு தொற்று ஏற்பட்டுள்ளதால், சில பிரதேசங்களின் ரயில்ப் பாதைகளின் தினசரி பராமரிப்பில் சிக்கல்கள் எழுந்துள்ளன. இதனால் வேக வரம்பு கடைப்பிடிக்கப்படும்.

இதன் காரணமாக பல ரயில்கள் தாமதமாக இயக்கப்படும் என்று இலங்கை ரயில் சாரதிகள் சங்கப் பொதுச் செயலாளர் கசுன் சாமர ஜெயசேகர தெரிவித்துள்ளார். (ப-4)

# கட்டுப்பாட்டு விலையை மீறி உரம், கிருமிநாசினி விற்பனை

## விவசாயிகள் பரிதவிப்பு

கிளிநொச்சி மே 8

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை. விதைப்பு ஆரம்பித்துள்ள நிலையில் உரம் மற்றும் களைநாசினிகளை கட்டுப்பாட்டு விலையில் பெற முடியாததால் அங்குள்ள தனியார் கடையில் அரசின் நிர்ணய விலையை விட இரண்டரை மடங்கு விலை கொடுத்து வாங்கி பயன்படுத்த வேண்டியுள்ளது. என சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

சிறு போக நெற்செய்கைக்கான உர வகைகளை நிர்ணய விலையில் பெற்றுத்தருமாறு மாவட்ட விவசாயத் திணைக்களத்துக்கும், நிர்ணய விலையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்வது தொடர்பாக நுகர்வோர் அதிகார சபைக்கு முறையிட்டும் பயன்கிடைக்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

50 கிலோ நிறையுடைய உர வகைகள் ஆயிரத்து 300 ரூபாவாக அரசின் நிர்ணய விலை உள்ள போதிலும் 3 ஆயிரம் ரூபாவாகவும் ஒரு லீற்றர் 9 ஆயிரத்து 500 ரூபா நிர்ணய விலையுள்ள களைநாசினி 13 ஆயிரம் ரூபாவாகவும் தனியார் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது. பொருள்கள் வாங்குவதற்குரிய பற்றுச்சீட்டு கேட்பவர்களுக்கு உரம் மற்றும் களைநாசினி வழங்கப்படுவதில்லை எனவும் விவசாயிகள் சுட்டிக்காட்டினர். (ப-9)

# ஒரே நாளில் 436 பேர் கைது

கொழும்பு,மே 8

முகக்கவசம் அணியத்தவறியமை மற்றும் சமூக இடை வெளியைப் பின்பற்றத் தவறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 436 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரே நாளில் அதிகளவானோர் நேற்று முன்தினமே கைது செய்யப்பட்டிருந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறுவோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டவர்களின் 14 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரை பதுக்காதீர்

### நிறுவனங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு,மே 8
12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் விநியோகத்தைத் தொடந்தும் முன்னெடுக்க வேண்டும் என்று உரிய நிறுவணங்களுக்கு, கூட்டுறவுச் சேவை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன அறிவித்துள்ளார்.
அவ்வாறு விநியோகத்தில் தடையை ஏற்படுத்தினால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.
12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு தொடர்பில், நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இது தொடர்பில் விநியோக நிறுவனங்களின் தலைவர்களை, இராஜாங்க அமைச்சர் சந்தித்துள்ளார்.
12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர்களை மறைத்துவிட்டு, அண்மையில் அறிமுகப்படுத்திய 18 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளில் நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. எனவே இனிவரும் நாள்களில், 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர்களை மாத்திரம் நிறுவனங்கள் விநியோகிக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.
இதேவேளை, சந்தையில் காணப்படும் எரிவாயு சிலிண்டர்களின் கொள்ளளவு தொடர்பான சோதனை நடவடிக்கைகளை நுகர்வோர் அதிகார சபை ஆரம்பித்துள்ளது. (ப-4)

# இனியும் அரசுக்கு ஆதரவளித்தால் சிறுபான்மை இருப்பு மாயமாகும்

### இம்ரான் மஹ்ரூப் தெரிவிப்பு

**கொழும்பு,மே 8**
**அரசால் எதிர்காலத்தில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் சட்டவரைவுகளுக்கு இனியும் ஆதரவு வழங்குவோமாக இருந்தால், அது சிறுபான்மை சமூகத்தின் பல சந்ததிகளைப் பாதிக்கும். எமது இருப்பையும் இல்லாமல் ஆக்கிவிடும்.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் இஃப்த்தார் நிகழ்வில் இருபதுக்கு ஆதரவளித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் கலந்து கொண்டனர். இதில் பொது ஜன பெரமுன மற்றும் சுதந்திர கட்சிஆகியவற்றின் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே இது மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.
அரசு அடுத்து கொண்டுவரவுள்ள சட்ட வரைவுகளுக்கு இவர்கள் ஆதரவளிக்கத் தயாராகின்றார்களா என்ற கேள்வி இதன்மூலம் எழுந்துள்ளது. எதிர்வரும் காலங்களில் துறைமுக நகரை மொத்தமாக சீனாவுக்கு தாரைவார்க்கும் சட்ட வரைவு, சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் ஒழிக்கும் தேர்தல் முறை மாற்றம் தொடர்பான சட்ட வரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.
கடந்த காலங்களில் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தார்கள் அதனால் அபகரிக்கப்படும் கிழக்கு மாகாண காணிகளை இவர்களால் மீட்க முடிந்ததா? ரிஷாத் பதியுதீன், அசாத் சாலி போன்றவர்களின் கைதைத் தடுக்க முடிந்ததா? புர்கா தடையை நீக்க முடிந்ததா? இருபதுக்கு ஆதரவளித்த பின் இவர்களால் எந்த சமூக பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு காண முடிந்தது என்பதை இவர்களில் ஒருவராவது கூறுவார்களா? -என்றார். (ப-4)

# புதிய வரி இலக்கில் இறைவரி சாதனை

கொழும்பு,மே 8
புதிய வரித் திருத்தத்துடன் நிதி அமைச்சால், தேசிய இறைவரித் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்கான வரி இலக்கு, 98 வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்று சவாலுக்கு மத்தியில், இந்த இலக்கை அடைந்தமைக்கு, தேசிய இறைவரித் திணைக்களத்துக்குஅரச நிதி பற்றிய குழு பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.
நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற அரச நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்கான வரி இலக்கான 575.5 மில்லியன் ரூபாவில், 98 வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதற்கமைவாக வரி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது.
ஐந்து வருடங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தப் புதிய வரித் திருத்தத்துக்கு அமைவாக, வரி செலுத்த வேண்டிய தனிநபர்களின் வருமான எல்லை 5 லட்சம் ரூபாவிலிருந்து 3 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து வரி செலுத்துபவர்கள் முழுமையாக விடுவிக்கப்படுவதற்கு இந்தப் புதிய வரித்திருத்தத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.
அறவிடப்படாத வரி வருவாயை சேமிப்பாக மாற்றுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றபோதும், ஊக்குவிக்கப்பட வேண்டிய தொழில்துறைகள் குறித்து அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
உள்நாட்டு உற்பத்தி மற்றும் முதலீட்டை அதிகரிப்பதற்கும், திரைப்படக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்களை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கும் தேசிய இறைவரித் திணைக்களம் காண்பிக்கும் அக்கறைக்கு மதிப்பளிக்கின்றோம் என்று அரச நிதி பற்றிய குழுவின் தலைவர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். (ப-4)

# மத்தளவில் தரையிறங்கும் விமானங்களுக்குச் சலுகை

கொழும்பு,மே 8
மத்தள சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும் அல்லது தரித்து நிற்கும் சகல விமானங்களுக்கும் விசேட சலுகை வழங்க சுற்றுலா அமைச்சு தீர்மானித்துள்ளது.
அதற்கமைவாக எவ்வித கட்டணங்களையும் இரண்டு வருடங்களுக்கு அறவிடாதிருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சுற்றுலா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
இந்தத் திட்டத்தின் ஊடாக, மத்தள விமான நிலையத்துக்கு வருகை தரும் விமானங்கள் மற்றும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும்.
அத்துடன் இந்த விமான நிலையத்துக்கு விமானங்களை வரவழைப்பதற்கு, லயன் ஏயார், உக்ரேன் எயார் லைன், இன்டிகோ, எயார் இந்தியா, எயார் விஸ்தாரா, சலாம் எயார், எமிரேட்ஸ், மோல்டிவியன் எயார் ஆகிய விமானச் சேவைகள் நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-4)

### எரிவாயு மோசடி

# சிலிண்டருடன் ஊடக சந்திப்பு

கொழும்பு,மே 8
நாட்டுக்குள் எரிவாயு மோசடி இடம்பெற்று வருகின்றது என்பதை எடுத்துரைப்பதற்காக, எரிவாயு சிலிண்டரொன்றை ஊடக சந்திப்புக்கு எடுத்து வந்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஸிம்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகச் சந்திப்பை நடத்திய அவர், முன்னர் கிலோ கிராமாக விற்பனை செய்யப்பட்ட எரிவாயு, தற்போது லீற்றராக மாற்றப்பட்டுள்ளது. மக்களுக்குத் தெரியாமல், மக்கள் கண்டுபிடிக்காத வகையில், இந்த விலையேற்றத்தை அரசு மேற்கொண்டுள்ளது என்று சுட்டிக்காட்டினார்.
இது தொடர்பில் சரியாகவும், முறையாகவும் ஆராய்ந்து பார்க்குமிடத்து, 27 சதவீத விலை அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
உலகச் சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படாத நிலையிலேயே, இலங்கை மக்கள் இந்த விலை அதிகரிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ப-4)

# 20 லட்சம் பேஸ்புக் கணக்குகள் முடக்கம்?

கொழும்பு,மே 8
சரியான உரிமையாளர்கள் இல்லாதவர்கள் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள சுமார் 20 லட்சம் பேஸ்புக் கணக்குகளை இடைநிறுத்துவதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்று வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.
அமைச்சர் அலி சப்ரியுடன் இணைந்து இதற்கான அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றதும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
உரிமையாளர்கள் இல்லாத பேஸ்புக் கணக்குகளின் மூலம் பயங்கரவாதம், அடிப்படைவாதம் மற்றும் இனவாதத்தைத் தூண்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.
இளம் சந்ததியினரை அழிக்கும் பல்வேறு சமூக விரோத செயற்பாடுகளைத் தூண்டுவதற்கும் இது வழிவகுப்பதாகக் கண்காணிக்கப்பட்டுள்ளது அதற்கமைவாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ப-4)

# 7 ஆவது நெடுஞ்சாலை பணிகள் ஆரம்பம்

கொழும்பு,மே 8
இலங்கையில் அமைக்கப்படவுள்ள 7 ஆவது அதிவேக நெடுஞ்சாலையின் பணிகள், பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
ருவன்புர நெடுஞ்சாலையின் முதற்கட்டப் பணிகளே பிரதமரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
கஹதுடவயில் இருந்து இங்கிரிய வரையிலான பகுதியின் நிர்மாணப்பணிகள் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவேல மரத்தின் தடியை வெட்டிய நோயாளியின் வீடு புகுந்து வழக்கு

## வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் அராஜகம்

மன்னர், மே 8
மன்னார் நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட ஆவணம் எனும் கிராமத்தில் இதய நோயாளியின் வீடு புகுந்து பறவைகள் சரணாலய திணைக்களத்தினர் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

தனது குடும்பத்தின் வாழ்வாதாரத்துக்காக உளுந்து, பயறுமற்றும்கவுப்பி போன்ற மேட்டு நில பயிர்ச்செய்கை மேற்கொள்ள இருக்கும் இதய சுகயீன முற்ற ஒருவர் அந்த பயிர்களுக்கு வேலி அடைப்பதற்காக, மன்னார் - பெரிய நாவற்குளம் பகுதியில் உள்ள அமைப்புகளின் அனுமதியுடன் தனியார் காணியொன்றில் கருவேலம் தடிகள் சிலவற்றை வெட்டி நானாட்டான் பிரதேசத்தில் உள்ள ஆவணம் என்னும் கிராமத்துக்கு கொண்டு வந்துள்ளார். இந்தச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. எனினும் சில நாள்கள் கழித்து, குறித்த நோயாளியின் வீட்டு வளவிற்குள் வந்த வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களத்தினர், அந்த நோயாளியை அச்சுறுத்தி குறித்த தடிகளை உழவு இயந்திரங்கள் மூலமாக ஏற்றிச் சென்றதோடு, அவர் மீது வழக்கும் பதிவு செய்துள்ளனர்.

வயல் நிலங்களுக்கு மட்டுமல்லாது, நிலத்தடி நீரை உறுஞ்சும் கருவேல மரங்களை அகற்றவேண்டும் என்று திணைக்களத் தலைவர்கள் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்றோர் வலியுறுத்தி வரும் நிலையில் வன விலங்குங்கள் பாதுகாப்புப் பிரிவினரின் குறித்த செயற்பாடு மக்களை அச்சத்துக்குள் உள்ளாக்கியுள்ளது. (ப-21)

# கருவேலம் மரங்களை அகற்றி பயன்தரு மரங்களை நடுங்கள்

## இடர் அதிகாரி ஆலோசனை

**மன்னார்,மே 8**

**மன்னார் மாவட்டத்தில் கருவேல முள் மரங்களை அகற்றி, பயன்தரும் மரங்களை நடுகை செய்ய வேண்டும் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரி கனகரத்தினம் திலீபன் தெரிவித்துள்ளார்**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டத்தில் கருவேல மரங்களின் பரிணாமம் அதிகரித்துள்ளது.

இவற்றுக்கு ஏனைய தாவரங்களை விட ஒட்சிசனை வெளியிடும் தன்மையும் மிகவும் குறைவு. ஆகவே சுவாசத்துக்குப் பொருத்தமற்ற தாவரங்களாகவும் காணப்படுகின்றன.

மன்னார் மாவட்டத்துக்கு கருவேல மரம் தேவையற்ற ஒன்றாகக் காணப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் விவசாய நிலங்கள், நீர் நிலைகளை அண்டிய.பகுதிகள் மற்றும் கரையோரப் பிரதேசங்களில் இத் தாவரங்கள் காணப்படுவதால், இவை பயன் தரக்கூடிய மரங்கள் மற்றும் தாவரங்களின் வளர்ச்சியைத் தடுக்கின்றது மன்னாரின் வறட்சிக்கு இதுவும் ஒரு பிரதான காரணமாக இருக்கின்றன.

மன்னார் மாவட்டத்தில் அதிகளவான விவசாய நிலங்கள் காணப்படுகின்றமையால் இந்த கருவேல மரங்களை அகற்றி, மன்னார் மாவட்டத்தின் காலநிலைக்கு ஏற்ப பயன்தரும் மரங்களை நடுவதற்கான திட்டங்களை முன்னெடுப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். -என்றார். (ப-4-213)



யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில், பொலிஸாரால் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் மக்களுக்கு விழிப்புணர்வை வழங்கியதோடு, வீதியால் செல்லும் வாகனங்களை மறித்து முகக்கவசம் அணியாதவர்களுக்கு எச்சரிக்கையும் விடுத்திருந்தனர். (ப-20)

# பொற்சுடர் மலருக்கு ஆக்கம் கோரல்

பண்டிதர் பொன்.சுகந்தனின் தந்தையான மறைந்த அமரர் ச.பொன்னம்பலத்தின் ஞாபகார்த்தமாக 'பொற்சுடர்' மலர் வெளிவரவுள்ளது.

மாற்றுத்திறன் படைத்த பிள்ளைகளின் ஆளுமைகளை வெளிக்கொணரும் பொருட்டு அவர்களின் கவிதை மற்றும் பாடல்கள் இம் மலரில் இடம்பெறவுள்ளன.

ஆக்கங்கள் 10 வரிகளுக்கு மேற்படாமலும், சமூக சிந்தனையோடும் அமைதல் வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்பாக 'பொற்சுடர்' பொலிகண்டி கிழக்கு வல்வெட்டித்துறை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அமரர் பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக ஆண்டுதோறும் வெளிவரவுள்ள இம் மலரானது எதிர்வரும் 26 ஆம் திகதி பொலிகண்டியில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து வெளியீடு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சங்கானையிலும் பொலிஸ் வேட்டை

சங்கானை, மே 8
கொரோனா சட்டங்களை மதிக்காது முகக்கவசமின்றி சங்கானை நகரப் பகுதியில் நடமாடியவர்கள், மீன்சந்தை வியாபாரிகள் மற்றும் பொதுப் போக்குவரத்துப் பயணிகள் என அனைவரும் பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினரால் எச்சரிக்கப்பட்டனர். வரும் நாள்களில் கொவிட் சுகாதார நடைமுறைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ப-319)

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி இருவர் மருத்துவமனையில்




கிளிநொச்சி, மே 8
கிளிநொச்சி புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்தில் உரம் பெறுவதற்காகச் சென்ற இருவர் குளவிக் கொட்டுக்கு இலகக்கான நிலையில் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கந்த புதன் கிழமை ஒருவரும், நேற்றுமுன்தினம் மற்றை ஒருவருமே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள ஆலம் ஒன்றில் உள்ள குளவிக் கூட்டில் இருந்தே குளவிகள் கலைந்து தாக்கியுள்ளன . அந்தக் குளவிக் கூடு நீண்டநாள்களாகவே உள்ளது எனினும் சம்பந்தப்பட்டவர்கள் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ப-113)

# பற்றையாக மாறியுள்ள காணிகளை துப்புரவாக்குமாறு துண்டுப்பிரசுரம்

முல்லைத்தீவு, மே 8
பற்றைக்காடுகளாகக் காணப்படும் காணிகளுக்கு முன்னால் அறிவித்தல் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டும் நடவடிக்கையில் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட காணிகளைத் துப்பரவு செய்யுமாறு பிரதேச சபைத் தவிசாளர் அண்மையில் அறிவித்திருந்தார். இந்த நிலையிலேயே அவ்வாறு பற்றைக் காடுகளாகக் காணப்படும் காணிகளுக்கு முன்னால் அறிவித்தல் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டு வருகின்றன. "காணிகளைத் துப்பரவு செய்யத் தவறும் பட்சத்தில் காணியானது பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டு, காணியின் உரிமையாளருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அந்தத் துண்டுப்பிரசுரத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களுடன் நேரடி தொடர்புகளை நிறுத்துங்கள்

## மன்னார் மீனவர்களுக்கு க.தொ. திணைக்களம் வேண்டுகோள்

**மன்னார், மே 8**

**தற்பொழுது உலகம் முழுவதும் பரவிவரும் கொவிட் 19 தொற்று நோயிலிருந்து மன்னார் மாவட்டத்தைப் பாதுகாக்க வேண்டுமானால், மன்னார் மாவட்ட மீனவர்கள் இந்திய மீனவர்களுடன் கொண்டுள்ள நேரடித் தொடர்புகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.**

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தளவில் இந்தியா மிக அண்மித்த நாடாக இருப்பதுடன் கடலிலும் சட்டவிரோத கடத்தல் மற்றும் ஆள்களை ஏற்றி இறக்குதல் போன்ற செயற்பாடுகளிலும் மன்னார் மாவட்ட மற்றும் இந்திய மீனவர்கள் சிலர் தீவிரமாக ஈடுபட்டு வருவது கடந்தகால செயற்பாடுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இதைக் கவனத்தில் எடுத்துள்ள மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களம், மன்னார் மாவட்டம் முழுவதும் மக்களுக்கும் குறிப்பாக கடற்றொழிலாளருக்கும் விழிப்புணர்வை முன்னெடுத்து வருகின்றது. அதாவது கொவிட்19 தொற்று நோயிலிருந்து நாட்டையும் மாவட்டத்தையும் பாதுகாக்க இந்திய மீனவர்க ளுடன் தொடர்புகளைத் தவிர்க்குமாறு மன்னார் தீவில் மன்னார் முதல் தலை மன்னார் வரை, மன்னார் பெரும் நிலப்பரப்பில் வங்காலை முதல் சிலாபத்துறை வரை, விடத்தல்தீவு தொடக்கம் வெள்ளாங்குளம் வரை உள்ள கடற்றொழிலாளர்களுக்கு நடமாடும் வாகன ஒலிபெருக்கிகள் மூலம் இந்த அறிவுறுத்தல்கள் மற்றும் விழிப்புணர்வுகள் என்பவை கடற்றொழில் திணைக்களத்தால் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. (ப-60)



### கடமைகளைப் பொறுப்பேற்றார் வவு.தெற்கு வலயப் பணிப்பாளர்

வவுனியா, மே 8

வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய திருமதி அன்னமலர் சுரேந்திரன் நேற்றுமுன்தினம் முதல் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார் .

கடந்த நான்கு வருடங்களாக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளராக திருமதி அன்னமலர் சுரேந்திரன் கடமையாற்றியிருந்தார். இதேவேளை வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய முத்து இராதாகிருஷ்ணன் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

### சைக்கிள் திருட்டு குற்றச்சாட்டு; யாழ்ப்பாணத்தில் ஒருவர் கைது

*14 சைக்கிள்கள் மீட்பு*

யாழ்ப்பாணம், மே 8

யாழ்ப்பாணத்தில் நீண்டநாள்களாக சைக்கிள் திருட்டில் ஈடுபட்டவர் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநகர் பகுதியைச் சேர்ந்த குறித்த நபருக்கு ஏற்கனவே நீதிமன்றத்தின் பிடியாணை உள்ள நிலையில் அவர் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது அவரது வீட்டிலிருந்து ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான 14 துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட நபர் விசாரணைகளின் பின்னர் நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)



### முடக்கப்பட்ட கிராமங்களின் மக்களுக்கு உலர் உணவு

சாவகச்சேரி, மே 8

தென்மராட்சி பிரதேசத்தில் கொரோனாத் தொற்றுக் காரணமாக முடக்கப்பட்ட இரு கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள வறிய நிலையில் வாழும் குடும்பங்களுக்கு பிரதேச செயலகத்தால் முதலாம் கட்ட உலர் உணவுப் பொருள்களும் மரக்கறி வகைகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

கொடிகாமம் மத்தி மற்றும் கொடிகாமம் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் கொடிகாமம் பிரிவில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட கிராமங்களாக அறிவிக்கப்பட்டு முடக்கப்பட்டுள்ளன. இரு பிரிவுகளிலும் வதியும் ஆயிரத்து 30 குடும்பங்களில் நிவாரணம் பெறத் தகைமையுள்ள 737 குடும்பங்களுக்கு 4 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்களும் 500 ரூபா பெறுமதியான மரக்கறி வகைகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (ப-9)

### சாவகச்சேரியில் நேற்றும் மூவர் கைது

சாவகச்சேரி மே 8

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் முகக்கவசம் அணியாமல் நடமாடினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றும் மூவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட 9 பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஒன்பது பேரையும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு, வழக்குகள் ஜூன் நான்காம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டன் இந்த நிலையில் நேற்றும் மூவர் கைது செய்யப்பட்டனர். (ப-9)





### 'மாஸ்க்' அணியாதோர் மீது வவுனியாவிலும் பொலிஸ் பாய்ச்சல்

*30 பேர் நேற்று கைது*

வவுனியா,மே 8

வவுனியா நகரப்பகுதியில் முகக்கவசம் அணியாமல் சென்ற 30க்கும் மேற்பட்டோர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதோடு அவர்கள் மீது நீதிமன்றில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி றொசான் சந்திரசேகர தலைமையிலான குழுவினரால் குறித்த நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பப்பட்டது. இதன்போது நகரில் முகக்கவசம் அணியாமல் சென்ற 30க்கும் மேற்ப்பட்டோர் கைதுசெய்யப்பட்டு வாகனங்களில் ஏற்றிச்செல்லப்பட்டனர். குறித்த நபர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குதாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்த பொலிஸார், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்காதவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை முன்னெ டுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளனர். (ப-110)

### மாகாண தேர்தலை நடத்துவதில் சிக்கல்

## ஆளுந்தரப்பினர் ஆலோசனை

கொழும்பு, மே 7

நாட்டில் தற்போதைய சூழ்நிலையில் தேர்தலொன்றை நடத்துவது பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் பசில் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்தாதிருக்க அரசு தீர்மானித்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் இடம்பெற்ற ஆளும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று பரவி வரும் தற்போதைய சூழ்நிலையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சிறந்த விடயமல்ல என்று ஆளுந்தரப்பின் கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நெத்தலியாற்றுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு

## விவசாயிகள் பாதிப்பு



**வலி.தென்மேற்கு, மே 8**
**புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு மேற்கு நெத்தலியாற்றை அண்டிய பகுதியில் உள்ள வயல் நிலங்களில் சட்டவிரோதமான முறையில் மண் அகழப்படுவதால் அப் பகுதி விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

விசுவமடு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள நெத்தலியாற்றுக்கு அருகில் காணப்படும் வயல் நிலங்களிலும், ஆற்றுப் படுக்கையிலும் இரவு வேளைகளில் யாரும் அறியாத வகையில் உழவு இயந்திரங்கள் மற்றும், டிப்பர் வாகனங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் மண் அகழப்பட்டு வருகிறது. இதன் காரணமாக வயல் நிலங்களில் பெரும் கிடங்குகள் ஏற்படுத்தப்படுவதால் தங்கள் வயல் நிலங்களில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். விசுவமடு மேற்கு பிரதேசத்தில் குறித்த மண் அகழ்வு இடம்பெறும் இடத்துக்கு அருகில் இராணுவ வீதித் தடுப்பு காணப்படுவதுடன் அத் தடுப்பில் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த நிலையிலும் இந்த சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.
இது தொடர்பாக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ப-115)



# தனியார் மருத்துவமனைகளில் சுகாதாரப் பிரிவு திடீர்ப் பாய்ச்சல்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா,மே 8
வவுனியாவில் உள்ள தனியார் மருத்துவமனைகள் மீது சுகாதார பரிசோதகர்களால் சிறப்பு சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
கொவிட் 19 தாக்கமானது வவுனியாவில் அதிகரித்து வரும் நிலையில் அதனை கட்டுப்படுத்தும் முகமாக சுகாதாரப் பிரிவினரால் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
தனியார் மருத்துவமனை ஒன்றில் கடமையாற்றும் மூன்று பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர்.
இதனையடுத்து வவுனியாவில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் நேற்றுமுன்தினம் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அங்கு உள்ள சுகாதார வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், சுகாதார நடைமுறைகள் பின்பற்றாமை, மருத்துவமனையில் கடமையாற்றுவோர் மற்றும் வந்து செல்வோர் முகக் கவசங்களை அணிந்துள்ளார்களா, சமூக இடைவெளி பேணப்படுகின்றதா போன்ற விடயங்கள் குறித்து பார்வையிடப்பட்டதுடன், கொவிட் தொடர்பான சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாத தனியார் மருத்துவமனைகளுக்கு எதிராக முறைப்பாடு களும் பதிவு செய்யப்பட்டன. (ஐ-18)

# இரு பெண்கள் மருத்துவமனையில்

சாவகச்சேரி, மே 8
தாக்குதலுக்கு இலக்கான நிலையில் பெண்கள் இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கைதடி கிழக்கைச் சேர்ந்த 41 வயதுடைய பெண்ணும், சாவகச்சேரியைச் சேர்ந்த 34 வயதுடைய பெண்ணும் உறவினர்களால் தாக்கப்பட்டனர் என்று தெரிவித்து காயமடைந்த நிலையில் நேற்று முன்தினம் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-9)

# சுற்றுலா நீதிமன்றம் ஒன்றை சங்கானையில் அமைக்க திட்டம்

மூளாய், மே 8
வலிகாமம் மேற்கு சங்கானை பகுதியில் சுற்றுலா நீதி மன்றம் ஒன்றை அமைப்பதற்கு ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
முதற்கட்டமாக இந்த சுற்றுலா நீதிமன்றத்தை அமைப்பதற்கு பொருத்தமான காணி ஒன்றை அடையாளப்படுத்தும் முயற்சி தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக வலிமேற்கு காணி பயன்பாட்டு குழுவுக்கு விண்ணப்பம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.
வலிகாமம் மேற்கு மக்கள் தற்போது மல்லாகத்தில் இயங்கும் நீதிவான் நீதிமன்றத்துக்கு செல்வதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக இரண்டு பஸ் எடுத்து பயணித்தே அங்கு செல்ல வேண்டியுள்ளது. இவ்வாறான சிரமங்களை நீக்கும் முகமாகவே இந்த சுற்றுலா நீதிமன்றம் அமைக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. குறைந்தது இரண்டு ஏக்கர் காணியை எதிர்பார்த்தே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அரச காணி அல்லது தனியார் காணியை இதற்காக ஒதுக்கமுடியும்.
ஏற்கனவே கடந்த 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் சங்கானையில் கிராம நீதிமன்றம் இயங்கிய காணித்துண்டு ஒன்று நீதியமைச்சின் பாவனையில்லாமல் உள்ளது. இக்காணி தற்போது புதிய கட்டடம் அமைப்பதற்கு போதுமானதாக இல்லை என்று நீதிமன்ற அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ப-121)

# தேங்காய்களின் விலையில் சரிவு

கிளிநொச்சி மாவட்டத்தில் தேங்காயின் விலையில் கடந்த சில தினங்களாக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
வட்டக்கச்சி, கல்மடு மற்றும் விசுவமடு போன்ற பகுதிகளில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தோட்டங்களில் பறிக்கப்பட்ட தேங்காய்கள் 55 ரூபாய் தொடக்கம் 58 ரூபாவுக்கு வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்பட்டன.
தற்பொழுது தென்னந்தோட்டங்களில் வியாபாரி களால் 40 ரூபா தொடக்கம் 42 ரூபாவுக்கு தேங்காய்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ய-12)

# பிற்போடப்பட்டுள்ளன கலாசாலை பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மே 8
சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தலை அடுத்து ஆசிரியர் கலாசாலை பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
நாட்டில் உள்ள எட்டு ஆசிரியர் கலாசாலைகளில் நடைபெற இருந்த பரீட்சைகள் திணைக்களம் நடத்தும் இறுதிப் பரீட்சை, திகதி குறிப்பிடப்படாமல் பிற்போடப்பட்டுள்ளது.
எதிர்வரும் 10ஆம் திகதி இப் பரீட்சை ஆரம்பமாக இருந்த நிலையில் பல்வேறு இடங்களில் இருந்து பரீட்சார்த்திகள் தாம் கற்ற ஆசிரிய கலாசாலைகளுக்கு பரீட்சைக்கு தோன்றுவதற்காகச் சென்று கலாசாலை விடுதிகளிலும் அயல் சூழலில் இருந்த வீடுகளிலும் தங்கியிருந்தனர். இந்த நிலையில் சுகாதாரப் பகுதியினர் வழங்கிய அறிவுறுத்தலை அடுத்து பரீட்சைகள் திணைக்களம் பரீட்சையை பிற்போட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# முல்லையில் வெளிச்சவீடு உடன் நடவடிக்கை தேவை

## கடற்றொழிலாளர்கள் கோரிக்கை



முல்லைத்தீவு, மே 8
முல்லைத்தீவில் வெளிச்ச வீட்டை அமைப்பதற்கு கடற்றொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
போர்க் காலத்தில் முல்லைத்தீவின் வெளிச்ச வீடு அழிக்கப்பட்டது.
2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து முல்லைத்தீவில் வெளிச்ச வீடு அமைக்க வேண்டும் என கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். மாவட்டச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு தொடர்ச்சியாக மனு மூலமும் நேரிலும் முல்லைத்தீவில் வெளிச்ச வீடு அமைக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டாலும் இதுவரை வெளிச்ச வீடு அமைக்கப்படவில்லை.
இந்த நிலையிலேயே தற்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (ம-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் நேற்றுமுன்தினம் மட்டும் 415,000 பேருக்கு கொரோனா

வொஷிங்டன், மே 8

இந்தியாவில் நேற்றுமுன்தினம் மட்டும் 4 லட்சத்து 15 ஆயிரம் பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு நாட்டில் ஒரே நாளில் பதிவான அதிக தொகையாக இது அமைந்தது.



உலகளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 15 கோடியே 70 லட்சத்தைக் கடந்துள்ளது என்று உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன.

இந்தப் பெருந்தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட நாடுகளின் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் முறையே அமெரிக்கா, இந்தியா, பிரேசில் ஆகிய நாடுகள் உள்ளன.

நேற்று மாலை வரையான உத்தியோகபூர்வ தகவல்களின் அடிப்படையில் கொரோனாவால் இதுவரை உலகளவில் 15 கோடியே 70 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் 3 கோடியே 33 லட்சம் பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் நேற்று மாலைவரை 2 கோடியே 15 லட்சம் பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பிரேசிலில் ஒரு கோடியே 50 லட்சம் பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து சுமார் 13 கோடியே 40 லட்சம் பேர் மீண்டுள்ளனர். சுமார் 32 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். (ம)

## அகவை அறுபது



Congratulations

எமது கல்லூரியின் ஆரம்ப பகுதி தலைவராகப் பணியாற்றி ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்று இன்று (08.05.2021) அகவை அறுபதில் காலடி வைக்கும்

**திருமதி ஞானேஸ்வரி சிவபாலன்**

அவர்கள் ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடன் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:* சேவையாளர் சங்கம்
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி

## நன்றி நவிலல்

கடந்த 06.04.2021 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**திருமதி யோகேஸ்வரி முருகேசு**



அவர்களின் மரணச்செய்தி அறிந்து உடன் வந்து ஆறுதல் கூறி தேவையான உதவிகளைச் செய்த உறவினர், நண்பர்களுக்கும் இன்றைய அசாதாரண சூழ்நிலையிலும் தமது பாதுகாப்பையும் பொருட்படுத்தாது அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்ட நல் உள்ளங்களுக்கும், நேரில் வந்து ஆறுதல் கூற முடியாத சூழ்நிலையில் தொலைபேசி அழைப்பின் மூலம் துக்கம் விசாரித்து ஆறுதல் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## VACANCY ANNOUNCEMENT

The HALO Trust is a UK based non-political, non-religious Non-Governmental Organization specialized in the removal of the land mines and other explosive remnants of war has been operating in Northern Province of Sri Lanka since 2002, currently working in Jaffna, Killinochchi, and Mullaitivu and has a support office in Colombo.

HALO is seeking hard working candidates for the below vacancy based in Kilinochchi office.

**Data Entry Officer – 2 Positions**

The Data Entry Officer is responsible for the entry of data from various sources onto a HR database. You will manage a large amount of information that is sensitive and confidential. Information you enter will be used by the organization for reference and reports. You are accountable to the Head of HR for your output.

**Responsibilities**

1. Prepare and sort documents for data entry.
2. Enter data into database and check to ensure the accuracy of the data that has been input.
3. Resolve discrepancies in information and obtaining further information for incomplete documents.
4. Respond to information requests from authorized personnel.
5. Scan documents and print files, when needed.
6. Keep information confidential.
7. Comply with data integrity and security policies.

**Requirements:**

- Computer literacy – familiarity with MS Office, SQL databases, experience with web applications is advantageous.
- English language skills.
- Ability to work under pressure to deadlines.
- Experience using office equipment, like printers and scanner.
- Typing speed and accuracy.
- Excellent knowledge of correct spelling, grammar and punctuation.
- Attention to detail.
- Confidentiality.

Interested candidates should submit their applications with Curriculum Vitae and Cover letter explaining your suitability for the position to the below address or email on or before 15 May 2021.

Successful candidates will be only contacted, for further information see the advertised TOR or please contact us on 021 228 5466.

Females are encouraged to apply

**HR Manager**
**The HALO Trust**
**450, Thirunagar west**
**Kilinochchi**
**E-mail to hr@halosrilanka.org**

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 . 11 . 1950



மறைவு 03 . 05 . 2016

**அமரர் கதிரவேலு தியாகராசா**

உரிமையாளர் – ராஜா மிதிவண்டி உதிரிப்பாக விற்பனை நிலையம்
மல்லாகம்

**திதி : சித்திரை அபரபக்ஷ துவாதசி 08.05.2021**

ஆண்டுகள் ஐந்து ஆனதுவோ அப்பா
ஆறவில்லை எம் துயரம்
பாரினிலே எம்மை வளர்த்த தெய்வமே எங்கள் அப்பா
கண்ணை இமை காப்பது போல்
எம்மைக் காத்த எங்கள் அப்பா
கலையாத உங்கள் முகமும்
கள்ளம் இல்லாத உங்கள் சிரிப்பும்
நாங்கள் காண்பது எப்போது அப்பா
உங்கள் உருவம் மறைந்தாலும்
உங்கள் உயிர் எப்பொழுதும் எம்மோடு
தான் இருக்கிறது அப்பா
எம் குல தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஷாத்தின் கட்சிக்கு புதிய பதில் தலைவர்

கொழும்பு, மே 8

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பதில் தலைவராக மூத்த சட்டத்தரணி என்.எம். சஹீட் நியமிக்கப்பட்டுள்ளார். கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவில் 90 நாள்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் விடுதலை செய்யப்படும் வரை கட்சியின் நடவடிக்கைகளை வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு தேவையான சில அதிகாரங்களை வழங்கும் நோக்கிலேயே இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அரசியல் உயர் பீடம் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் கூடிய போதே பதில் தலைவர் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீனின் ஆலோசனையுடனேயே இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது இது தற்காலிகமானது" என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சட்ட ஆலோசகர் றுஸ்தி ஹபீப் தெரிவித்தார். (ப)

# இளைஞனை நிர்வாணமாக்கி வீடியோ எடுத்த குற்றச்சாட்டு;

## வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியா, மே 8

வவுனியாவில் இளைஞர் ஒருவரைத் துன்புறுத்தி நிர்வாணமாக்கி காணொலி எடுத்து, சமூகவலைத் தளத்தில் பதிவேற்றினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சமணங்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ஆச்சிபுரம் பகுதியில் இளைஞர் ஒருவரை நிர்வாணமாக்கியதுடன் துன்புறுத்தலும் மேற்கொண்டு அதனை தொலைபேசியில் காணொலி எடுத்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அதே இடத்தைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞர் ஒருவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த காணொலியை பதிவேற்றிய சமூக வலைத்தளங்களின் விவரங்களை பொலிஸார் பெற்றுக்கொண்டுள்ளர். குறித்த இளைஞரை நீதிமன்றில் முற்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ப-18,110)

# கிளி. ஆனைவிழுந்தானில் மீண்டும் கரும்புச்செய்கை



கிளிநொச்சி, மே 8

கிளிநொச்சி - ஆனைவிழுந்தான் பகுதியில் மீண்டும் கரும்புச் செய்கையை மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் பிரதேசத்தில் சுமார் 196 ஏக்கர் பகுதியில் கரும்புச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. எனினும் போர்க் காலத்தில் மேற்படி கரும்புச் செய்கை கைவிடப்பட்டது. தற்போது அங்கு மீண்டும் கரும்புச் செய்கையை மேற்கொள்ள பிரதேச அமைப்புக்கள் விருப்பம் தெரிவித்தமையை அடுத்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-6)

# பொறியியலில் தொழில் வாய்ப்புகளை தேடும் மாணவர்களுக்கு SLIITயே சரியான தெரிவு

## SLIIT பொறியியல் பீட பீடாதிபதி பேராசிரியர் சமன் திலகசிறியுடனான செவ்வி

இலங்கையின் முன்னணி உயர் கல்வி நிறுவனமான SLIIT ஆனது உலகத்தரம் வாய்ந்த பட்டதாரிகள் உறுதியுடன் பெரு நிறுவனங்களில் காலடி எடுத்து வைக்கும் முகமாகவும் நிறுவனத்தின் உயர் கல்வி மற்றும் ஆய்வு மற்றும் ஏனைய பொறியியலை மையப்படுத்திய செயற்பாடுகளை வழங்கும் நோக்கத்திற்கு இணங்கவும் 2007ஆம் ஆண்டு தனது பொறியியல் பீடத்தை ஆரம்பித்தது.

"பொறியியல் பீடமானது உலக தொழில் வாய்ப்புகளுக்காக உயர் தரமான கல்விக்கான தேவையை அடையாளம் கண்டு 1999ஆம் ஆண்டு முதல் உயர் கல்வி பயணத்தை மேற்கொண்டு வரும் தாய் நிறுவனமான SLIIT யால் வழங்கப்பட்ட கலை நேர்த்தியான உள்ளக கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளது. கடந்த 20 வருடங்களாக SLIITயானது பலர் வாழ்க்கையை மேம்படுத்தியதும் உலகளாவிய அங்கீகாரம் பெற்ற கல்வித் தரங்களைத் தேடியவர்களுக்கு உயர் கேள்வியை தோற்றுவித்ததுமான 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெற்றிக் கதைகளை உருவாக்கியுள்ளது.

இந்த கல்வியகமானது தரமான கல்வியை வழங்கி வருவதுடன் அனைத்து இனங்களிலும் தமது சிறப்பான சாதனைகள் மூலம் உலகின் அனைத்து பகுதிகளிலும் SLIIT யின் பழைய மாணவர்கள் முக்கியத்துவம் பெற்று விளங்குவது இதற்கு சாட்சியாகும் என "பொறியியல் பீடாதிபதியான பேராசிரியர் சமன் திலகசிறி தெரிவித்தார்.

**SLIIT பொறியியல் பிரிவுகள்**

பொறியியல் பீடமானது 5 கல்விப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. தற்போது மாணவர்கள் இலத்திரனியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல், கட்டிடப் பொறியியல், பொறிமுறை பொறியியல், மற்றும் மூலப்பொருள் பொறியியல் ஆகிய 4 துறைகளில் வழங்கப்படும் விஞ்ஞான பொறியியல் இளமானியுடன் பட்டதாரி நெறிகள் வரிசையைக் கொண்டுள்ளது. இந்த பட்டதாரி நெறிகள் இயந்திர பொறியியலில் விசேடத்துவத்தை உள்ளடக்கியதாக 8க்கு மேற்பட்ட விசேடப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. மாணவர்கள் இந்த பெறுமதியான பட்டதாரி நெறிகளை குறைந்த கட்டணத்தில் பின்பற்ற முடியும். எமது பட்டதாரிகள் SLIITயில் தாம் பெறும் தகமைகள் பூரண அங்கீகாரம் பெற்றவை என்பதை அறிந்து கொள்வதுடன் SLIIT யினால் வழங்கப்படும் அனைத்து பட்டதாரி நெறிகளும் இலங்கையின் உயர் கல்வி அமைச்சினால் பல்கலைக்கழக சட்டங்களின் கீழ் அங்கீகாரம் பெற்று திகழ்கின்றனர். மேலும் பொறியியல் பீடத்திலுள்ள நில அளவையியல் பிரிவானது உயர் அங்கீகாரம் பெற்ற 3 வருட BSc நெறியை UK இன் Liverpool John Mores பங்குடைமயுடன் வழங்குவதுடன் நாம் வழங்கும் நில அளைவயியல் பட்டதாரி நெறியானது UK இன் RICS அங்கீகாரம் பெற்றதாகும்.

**தொழில்சார் விரிவுரைக்குழு மற்றும் கல்விச் சிறப்புகள்**

அனைத்து நேரங்களிலும் வழிகாட்டல்களை வழங்கக்கூடிய உயர் தகைமை வாய்ந்த முழு நேர கல்விசார் ஊழியர்களுடன் கலை நேர்த்தியான சிறந்த சாதனங்களைக்கொண்ட ஆய்வு கூடங்கள் மற்றும் ஏனைய உள்ளக கட்டமைப்பு வசதிகளுடன் மாணவர்கள் உலகத் தரங்களுடன் தமது அதிகபட்ச ஆற்றலை அடையக்கூடிய விதத்தில் உலகத்தர தொழில் தகமையாளர்களாக வளர்வதற்கான உத்தரவாதத்தை வழங்குகிறது. அவர்களின் பட்டதாரி கற்கை நெறிகளின்போது அவர்களுக்கு கட்டாயமான 6 மாத தொழில் பயிற்சி வழங்கப்படுவதுடன் இது அவர்களுக்கு துறையில் அவர்கள் தொடர்பான பிரிவுகளில் பெறுமதியான அனுபவத்தை வழங்கும்.



"எமது முழு நேர விரிவுரையாளர்கள் தமது ஒவ்வொரு மாணவர்களுக்கும் சிறப்பான கற்கையை வழங்குவதுடன் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளில் சிறந்த தெரிவினை மேற்கொள்வதற்கு உதவிகளை வழங்குகின்றனர். இந்த செயற்பாடுகளில் உதவிகளை வழங்குவதற்கு எமது பட்டதாரி பாடத்திட்டம் இலங்கை பொறியியலாளர் கல்வியகம் ஊடாக அடிப்படை கல்வி முறையில் வாஷிங்டன் அங்கீகாரத்துக்கிணங்க தயார் செய்யப்படுகிறது" என்று பேராசிரியர் சமான் திலகசிறி தெரிவித்தார்.

**ஒட்டுமொத்த திறன்**

பொறியியல் பீடத்தில் பட்டதாரி நெறிகளில் சேர்க்கப்பட்டுள்ள தர முறைமையானது தாய் நிறுவனமான SLIITயில் காணப்படும் தர உறுதியுடன் மிகச் சிறந்த அங்கீகாரம் பெற்ற வழிகாட்டலின் கீழான அதே முறையாக உள்ளது. தவிர SLIIT மாலேப கம்பஸில் உள்ள பூரண பல்கலைக்கழக சூழல் மற்றும் ஏனைய உள்ளகக் கட்டமைப்பு வசதிகளான நூலகம் மற்றும் இணையத்தளம், விளையாட்டு என்பன மாணவர்களுக்கு பொறியியல் பீடத்தில் சிறந்த கற்கை அனுபவத்தை வழங்குகின்றன.

**ஒற்றுமையே பலம்**

SLIIT யின் பொறியியல் பீடமானது மாணவர்கள் மத்தியில் ஒற்றுமையை ஊக்குவிப்பதுடன் அவர்களது தொடர்பாடல் திறைமைகள் மற்றும் உள்ளார்ந்த திறன்களை பல்வேறு RoboFest போன்ற கல்விசாரா திட்டங்கள் மூலம் மேம்படுத்துகிறது. RoboFest ஆனது இலத்திரனியல் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படும் தேசிய மட்டப்போட்டி ஆகும். இதற்கு மேலதிகமாக SLIIT பொறியியல் பீடத்தினால் 'Ganthera', 'Bridge fest', 'SLIIT's Got Talent, Young Engineers Expo, IEEE Day, IMechE, Pitstop,வழி மற்றும் EsalaPandolare என்பன ஏற்பாடு செய்யப்படுகின்றன. மேலும் மாணவர்கள் SLIIT மற்றும் பொறியியல் பீடத்தினால் ஏற்பாடு செய்யப்படும் எண்ணற்ற சமூகத் திட்டங்கள் மூலம் வலுவான இரக்க உணர்வுகளை விருத்தி செய்துகொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 நிமிடங்கள் போராட்டம் தோற்றுப் போய்விட்டோம்

## மருத்துவரின் உருக்கமான பதிவு

கொழும்பு,மே 8

**சுமார் 45 நிமிடங்களாக, எம்மால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டோம். எனினும் இரண்டு உயிர்களையும் கொரோனா பறிந்து விட்டது. அங்கிருந்த அனைவரும், எவ்வித அசைவுமின்றி, சில நொடிகள் உறைந்துவிட்டோம். தாதியர்களின் முகங்களில், கண்ணீர் வழிந்தோடியது.**

இவ்வாறு ராகம மருத்துவமனையின் மருத்துவர் ஒருவர் தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு இலக்கான கர்ப்பிணியொருவர் கடந்த புதன்கிழமை உயிரிழந்தார்.

இந்த நிலையில் கர்ப்பிணியையும் அவரது வயிற்றில் வளர்ந்த சிசுவையும் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்ட மருத்துவர் தனது பதிவில் மேலும் தெரிவிக்கையில்,

"அன்று மாலை 4.30 மணியிருக்கும். கொவிட் பிரிவு, மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அப்போது எம்மிடம் கர்ப்பிணி ஒருவருக்கென கட்டிலொன்று கோரப்பட்டது. ஆனால், எமது விடுதியிலிருந்த 6 கட்டில்களும் நிரம்பியிருந்தன. அவர்கள் அனைவரும், உயிரிருக்கும் போராடிக் கொண்டிருந்தனர். அதிகபட்ச அளவில், அவர்களுக்கான ஒட்சிசனை வழங்கிக் கொண்டிருந்தோம். வேறு வழியின்றி ஓரளவுக்கேனும் தாக்குபிடிக்கக்கூடிய நிலைமையில் இருந்த நோயாளி ஒருவரை வேறு விடுதிக்கு மாற்றிவிட்டு, அந்தக் கட்டிலை, கர்ப்பிணிக்காக ஒதுக்கினோம்.

மாலை 6.30 மணியிருக்கும். மினுவங்கொட மருத்துவமனையிலிருந்து மாற்றப்பட்டிருந்த அந்தக் கர்ப்பிணி இங்கு அழைத்து வரப்பட்டார். இரண்டு மாதங்களுடைய கரு, அவரது வயிற்றில் வளர்ந்து கொண்டிருந்தது. அது, அவருடைய முதல் குழந்தை. அவர் விடுதிக்குள் நுழையும்போதே, தன்னையும், குழந்தையையும் காப்பாற்றுமாறு எம்மிடம் கேட்டுக் கொண்டார். அவர், மூச்செடுக்க மிகவும் சிரமப்பட்டார். உடனடியாகச் செயற்பட்ட எமது பணிக்குழு, அவருக்குப் பொருத்த வேண்டிய அனைத்து கருவிகளையும் பொருத்தியது. சில விநாடிகளே சென்றன. எமது முயற்சி பயனளிக்கவில்லை. இது துரதிர்ஷ்டமான சந்தர்ப்பமாகும்.

இந்த விடயத்தில் அனைத்து சுகாதாரத் தரப்பினரும் களைத்துப் போயுள்ளனர். அவர்களால் முடிந்த அதிகபட்ச உழைப்பைப் போட்டுக்கொண்டே இருக்கின்றனர். பொதுமக்கள், தங்களுடைய பாதுகாப்பு தொடர்பில், இன்னும் அதிகமாகச் சிந்திக்க வேண்டும். இல்லாவிடின், இன்னும் சில நாள்களில், இந்தியா போன்றதொரு நிலைமையையே நாங்களும் எதிர்நோக்க நேரிடும்" - என்று தெரிவித்துள்ளார்.

(ப-4)

# 24 மணித்தியாலத்தில் 25 பேர் உயிரிழப்பு

கொழும்பு,மே 8

நாட்டில் நேற்றுக் காலையுடன் முடிவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் 25 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பகல் 11 இறப்புக்களும், நேற்றுமுன்தினம் இரவு 14 இறப்புக்களும் பதிவாகியுள்ளன. உயிரிழந்தவர்கள் அனைவரும் 35 தொடக்கம் 82 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-4)

# கிராம அலுவலர்கள் 50 பேருக்கு தொற்று

கொழும்பு,மே 8

கிராம அலுவலர்கள் 50 பேருக்கு இதுவரை கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை கிராம உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று தடுப்பூசிகளை கிராம அலுவலர்களுக்கு முதற்கட்டமாகச் செலுத்த அரசு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

கிராம அலுவலர்கள் மக்களுடன் நேரடியாகத் தொடர்பு படுவதால் இந்த ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். எனவே முன்னுரிமை அடிப்படையில் கிராம அலுவலர்களுக்கு இனியாவது தடுப்பூசிகளை ஏற்ற வேண்டும் என்று கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் சுமித் கொடிகார தெரிவித்துள்ளார். (ப-4)

# அவசர சிகிச்சைப் பிரிவில் 5 கர்ப்பிணித் தாய்மார்

கொழும்பு, மே 8

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் 5 பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் முதல் தடவையாக கொரோனாத் தொற்றுக்குள்ளான கர்ப்பிணிப் பெண் ஒருவர் கடந்த 5ஆம் திகதி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# வவுனியாவில் 20 பேருக்கு தொற்று

வவுனியா, மே 8

வவுனியாவில் நேற்று 20 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியா பூந்தோட்டம் கல்வியியற் கல்லூரியில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 20 பேருக்கே இவ்வாறு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து அழைத்து வரப்படுவோர் மற்றும் தென்பகுதிகளைச் சேர்ந்தோர் குறித்த தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையின் மாதிரிகள் கடந்த புதன்கிழமை பெறப்பட்டிருந்தன. அதன் முடிவுகளின் அடிப்படையில் 20 பேருக்குத் தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (சு-110)

# கர்ப்பிணித் தாய்மாருக்கு தடுப்பூசி ஏற்றுங்கள்

## இலங்கை மகப்பேற்றியல் கல்லூரி மற்றும் மகப்பேற்றியல் நிபுணர்கள் வலியுறுத்து

கொழும்பு, மே 8

கர்ப்பிணித் தாய்மாருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றுமாறு இலங்கை மகப்பேற்றியல் கல்லூரி மற்றும் மகப்பேற்றியல் நிபுணர்கள் அரசை வலியுறுத்தியுள்ளனர். ஆனாலும் சுகாதார அமைச்சின் குடும்பநல சுகாதாரப் பிரிவு பணிப்பாளர் மருத்துவர் சித்திராமாலி டீ சில்வா இது தொடர்பில் எந்தவொரு இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

"கர்ப்பிணித் தாய்மார் கர்ப்பம் தரித்து 28 வாரங்களின் பின்னர் கொரோனாத் தொற்று தொடர்பான ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர். எனவே கர்ப்பிணித் தாய்மாருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படவேண்டும்" என்று இலங்கை மகப்பேற்றியல் கல்லூரியின் தலைவர் மருத்துவர் பிரதீப் டீ சில்வா வலியுறுத்தியுள்ளார்.



இங்கிலாந்தின் மகப்பேற்றியல் மற்றும் பெண்நோயியல் ரோயல் கல்லூரி, கர்ப்பிணிப் பெண்களுக்கும் தடுப்பூசி வழங்கலாம் என்பதைப் பரிந்துரைத்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை சுகாதார அமைச்சின் குடும்பநல சுகாதாரப் பிரிவு பணிப்பாளர் மருத்துவர் சித்திராமாலி குறிப்பிடுகையில், "உலகில் சுகாதார முன்களப் பணியாளர்களாக உள்ள சில கர்ப்பிணித் தாய்மாரே தடுப்பூசி ஏற்றிக் கொண்டுள்ளனர். நாம் எமது கர்ப்பிணிப் பெண்களை பரிசோதனை எலிகளாக மாற்ற முடியாது. கர்ப்பிணித் தாய்மாருக்கு தடுப்பூசி ஏற்றுவது தொடர்பில் எமது ஆலோசனைச் சபை ஆராய்கின்றது" - என்று குறிப்பிட்டார். (ஒ.5)

# கர்ப்பிணிகளுக்கு கொரோனா ஆபத்து

கொழும்பு,மே 8

கர்ப்பம் தரித்து 28 வாரங்களின் பின்னர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டால், அது மிகவும் ஆபத்தானது என்று கொழும்பு காசல் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் சனத் ஜெனரோல் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணிக்கு 28 வாரங்களில் பின்னர் கொரோனாத் தொற்று ஏற்பட்டால், தொற்றுக்கான எவ்வித அறிகுறிகளும் தென்படாது. அதனால் நோயைக் கண்டுபிடிப்பதில் சிக்கல் ஏற்படும்.

எனவே கொரோனாத் தொற்றுக்கான சிறு அறிகுறிகள் தென்பட்டாலும் விரைவில் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார் . (ப-4)

# 24 பொலிஸாருக்கு கொரோனா மூடப்பட்டது கிளி. பொலிஸ் நிலையம்

கிளிநொச்சி, மே 8

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மற்றும் அக்கராயன்குளம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 24 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவு வெளியான பி.சி.ஆர். முடிவுகளின் பிரகாரம் மேற்படி பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸாருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து கிளிநொச்சி பொலிஸ் நிலையம் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன், பொலிஸ் நிலையங்களுடன் நெருங்கிய தொடர்பிலிருந்தவர்கள் அவதானத்துடன் இருக்குமாறும் நோய் அறிகுறிகள் தென்படுகின்றபோது உடனடியாக தங்களை பரிசோதனைக்குட்படுத்திக்கொள்ளுமாறும் சுகாதாரத் துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ப-6,214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையை தரமுயர்த்த முஸ்லிம் காங்கிரஸ் விடாது



## ஆருடம் சொல்கிறார் வியாழேந்திரன்

**கொழும்பு, மே 8**

**சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸோடு இணைந்து கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்த லாம் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நினைத்தால் அது பகல்கனவு. இந்த விடயத்தில் முஸ்லிம் காங் கிரஸ் தமிழர்களின் எதிரிகளாகவும் விரோதிகளாகவுமே செயற்படுகின்றனர் என இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினர் தந்திரமாகவும் இராஜதந்திரமாகவும் காய்களை நகர்த்துபவர்கள். அவர்கள் கல்முனை வடக்கு உப பிரதேச செயல கத்தை தரமுயர்த்த உதவுவார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பகல் கனவு காணக்கூ டாது.

அவர்கள் உங்களுடன் சுமூகமான உறவை, விட் டுக்கொடுக்கும் உறவை கொண்டிருப்பார்களேயா னால் கல்முனை வடக்கு உப பிரதேச செயல கத்தை தரமுயர்த்த தமது இணக்கத்தை வெளிப் படுத்திக் காட்டட்டும் பார்க்கலாம் என சவால் விடுக்கின்றேன். கிழக்கில் நாம் முஸ்லிம் மக்க ளுக்கு பல விட்டுக்கொடுப்புக்களை செய்துள் ளோம். அக்கரைப்பற்று பிரதேச சபை ஒரே நாளில் மாநகர சபையானது.

மட்டக்களப்பில் நிலைத் தொடர்பற்ற முஸ்லிம் கல்வி வலயம் உருவானது. அம்பாறைக்கு தனி ஆர்.டி.எஸ். அலுவலகம் உருவானது.

ஆனால் கல்முனை வடக்கு உப பிரதேச செயலக விடயத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸினர் கல் முனை தமிழ் மக்களின் ஒட்டுமொத்த எதிரியாகவும் விரோதி யாகவுமே செயற்படுகின்றனர்.

அதிலும் ஹரிஷ் எம்.பி. அப்பட்டமாக தமிழர் விரோதியாக செயற்படுகின்றார். சாணக்கியன் எம். பி. கடந்த செவ்வாய்க்கிழமை இங்கு என்னைப் பற்றி சில விடயங்கள் கூறினார். அவர் நாடாளு மன்றத்துக்கு புதியவர். அவர் 4 ஆர்ப்பாட்டங்கள் செய்திருந்தால் நான் 40 ஆர்ப்பாட்டங்கள் செய்த வன். அவர் போகப்போக புரிந்து கொள்வார். இங்கு முஜிபுர் ரஹ்மான் எம்.பி.யும் உள்ளார். இந்த விடயத்தில் முஸ்லிம் எம்.பி.க்கள் தடையாக இருக்கக்கூடாது என அவரும் எடுத்துக்கூற வேண் டும் - என்றார். (ம-44)

## வலிகிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி
## பதவி வெற்றிடம்

கீழ்க்காண் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் சங்கத்தினால் வெளிவாரியாக கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை ரூபா.10/- செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் "பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி" என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றேல் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும். பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்பத்துடன் தகைமைச்சான்றிழ் களின் நிழல்பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப் படும் (மேலதிக விபரம் தேவைப்படின் தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்). கூட்டுறவுச்சங்க சேவையில் உள்ள பணியாளர்கள் தமது சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுத்திகதி : 24.05.2021 (நண்பகல் 12.00மணி)

நீர்வேலி. பொது முகாமையாளர்.
2021.05.07

**01. பதவி : கணக்குப்பதிவாளர்** 301/11 - வெற்றிடம் - 01
சம்பள அளவுத்திட்டம்: 17190-20740
170X10-185x10 (04/2018 இன்படி)
வயதெல்லை: 18-45 (கூட்டுறவுப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக் கப்படமாட்டாது.)

**தகைமைகள்:** (அ) கூட்டுறவு பணியாளர் 12வது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / இலிகிதர் பதவியில் 2வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 13வது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியில் 4 வருடங்களுக்கு குறையா அனுபவம்

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தில் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு வேலையில் 2வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திர உயர்தரசான்றிதழ் / க.பொ.த (உயர்தரம்) இல் கணக்கியல் உட்பட 3பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப் பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு வேலையில் 2வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**02. பதவி - எழுதுனர்** - வெற்றிடம் - 04
சம்பள குறியீட்டு இல: 302/15 –
சம்பள அளவுத்திட்டம்: 15545-18245
130x10-140X10 (04/2018 இன்படி)
வயதெல்லை: 18-45 (கூட்டுறவுப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)
பால் : ஆண்/பெண்

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**
(அ) கூட்டுறவுப்பணியாளர் 16வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவி யொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) க.பொ.த (சாதாரணம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவை களுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவுச்சங்க மொன்றில் எழுதுவினைஞர் பதவியொன்றில் ஒரு (01) வருடத்துக்கு குறையாத அனுபவம்.

**03. பதவி: கிளை முகாமையாளர்** வெற்றிடம் - 03
சம்பள குறியீட்டு இல: 208/15 –
சம்பள அளவுத்திட்டம்: 15545-18245
130x10-140X10 (04/2018 இன்படி)
வயதெல்லை: 18-45 (கூட்டுறவுப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக் கப்படமாட்டாது.)

**தகைமைகள்:** (அ) கூட்டுறவு பணியாளர் 16வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 17வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் நான்கு 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) கூட்டுறவு பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங் படும்.

**04. பதவி - எரிபொருள் நிரப்புனர்** - வெற்றிடம் 03
சம்பள குறியீட்டு இல: 313/16
சம்பள அளவுத்திட்டம்: 15135-17685
120x10-135X10 (04/2018 இன்படி)
வயதெல்லை: 18-45 (சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது)
பால் : ஆண்

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**
(அ) கூட்டுறவுப்பணியாளர் 17வது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஒரு (01) வருடத்திற்கு குறையாத அனுபவம் .

அல்லது

(ஆ) 8ம் வகுப்பு கல்விச்சான்றிதழ்

பொது முகாமையாளர்.

# பொ-பொ பேரணிக்காக நஸீருக்கு வேதனையாம்!

கொழும்பு, மே 8

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான எழுச் சிப்பேரணியின் போது அட்டாளைச்சேனை பிரதே சத்தில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனுடன் இணைந்து கொண்டதையிட்டு வெட்கப்பட்டு மனவேதனையடைகிறேன் என்று முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முஸ்லிம் காங் கிரஸின் உயர்பீட உறுப்பினருமானஏ.எல்.முஹம்மது நஸீர் தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அண்மை யில் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையானது கல்முனை மாநகரத்தை பிரித்தாளும் நடவடிக்கை களை மேற்கொண்டு முஸ்லிம் தமிழ் உறவுகளுக் குள் விரிசலை ஏற்படுத்துவதற்கான தூண்டுதலாக உள்ளது. அவர் நல்ல அரசியல்வாதி என்று நான் மட்டுமல்ல முழு முஸ்லிம் சமூகமும் அவரைப் பாராட்டியது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்று இன உறவுக்குள் விரிசலை ஏற்படுத்தி இதை பிரித்தாள்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக் கியன் எடுக்கும் நடவடிக்கைகளுக்காக நான் கவ லையடைகின்றேன்.

பல விட்டுக் கொடுப்புக்கள் செய்யப்பட்டன எனக் கூறினார். பல விடயங்களை பற்றி அவர் இன்னும் அறிய வேண்டும். அம்பாறையில் இருந்து பிரிந்து தனியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை செயற்படுகிறது எனவும் இதற்கு தமிழ் மக்கள் விட்டுக் கொடுத்தனர் எனவும் கூறுகின்றார்.

இவரது கூற்றுக்கள் அனைத்தும் வியப்பாகவுள்ளன. வடக்கு மாகாணத்தில் இருந்து முஸ்லிம் மக்களை வெறுங்கையோடு விடுதலைப்புலிகள் விரட்டி வெளி யேற்றி அகற்றியபோது அம்மக்கள் அகதிகளாக புத்தளத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் தற்போதும் மனைகள் இன்றி வாழ்ந்து வருகின்றார்கள். இதற்கு இன்னும் யாராலும் நியாயங்கள் வழங்கப்படாமல் உள்ள நிலையில் முஸ் லிம் தமிழ் உறவுகளுக்குள் விரிசலை ஏற்படுத்தி எமது மக்களுக்காக சாணக் கியன் எம்.பி முதலைக் கண்ணீர் வடிக் கத் தேவையில்லை.

தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த வேளை முன் னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இனியபாரதியால் அக்கரைப்பற்று கல்வி வலயம் இரவோடு இரவாக பிரிக்கப்பட்டு இனரீதியாக திருக்கோவில் கல்வி வல யம் உருவாக்கப்பட்டது. இதை சாணக் கியன் எம்.பி. அறியவில்லையா? இன ரீதியாக பிரிப்புச் செய்கின்றவர்கள் யார்? - என்றார். (ம)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கனகம்மா

கருங்காலி காரைநகரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கனகம்மா அவர்கள் நேற்று (07.05.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை தங்கம்மா அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா பார்வதி அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், செல்வரட்ணம், காலஞ்சென்றவர்களான பத்மாவதி, அரசரட்ணம், நவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும். ஆனந்தகுமாரன், ஆனந்த ராணி, ஆனந்தபாலன், ஆனந்தமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், விஷயேஸ்வரி, கணேசபிள்ளை, இந்திரயோதி, ராகுலசேகரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கருங்காலியில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைக்காக நேற்று (07.05.2021) வெள்ளிக்கிழமை 4.00 மணியளவில் வைக்கப்பட்டு தகனக் கிரியைக்காக கருங்காலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
0778449889 குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா தாண்டவம்;
# கிளி.பச்சிலைப்பள்ளியில் கட்டுப்பாடுகள் இறுக்கம்

பச்சிலைப்பள்ளி, மே 8

**கொரோனா வைரஸ் பாதிப்பைக் கட்டுப்படுத்தும் முன்னேற்பாடான நடவடிக்கையாக கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுச் சந்தைகள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.**

அதன்படி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வர்த்தகத்தில் ஈடுபடுவோர் குறைந்தது 15 நாள்களுக்கு ஒரு முறையாவது பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதுடன் இரவு ஒன்பது மணிக்கு மேல் அனைத்து வர்த்தகநிலையங்கள் உணவகங்கள் யாவும் மூடப்படவேண்டும். பிரதேசத்தில் இரவு நேர உணவகங்கள் மற்றும் விடுதிகள் யாவும் தற்காலிகமாக மூடப்படுவதுடன் பிரதேசத்தில் நடமாடும் வியாபாரத்துக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. பிரதேசத்தில் அனுமதி பெறப்படாத ஒன்றுகூடல் நிகழ்வுகள் நடைபெற்றால் பொதுச்சுகாதாரச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதால் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபடுவதற்கு மேற்படி நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்ரமணியம் சுரேன் அறிவித்துள்ளார். (ப-12,6)

## தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உரிய காலத்தில் அரச நிதி கிடைப்பதில்லை

*பச்சிலைப்பள்ளி சபைத் தவிசாளர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, மே 8

தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு அரசால் வழங்கப்படும் நிதி உரிய நேரத்தில் கிடைப்பதில்லை என பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்ரமணியம் சுரேன் தெரிவிக்கையில்;

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொடிகாமத்துக்கு அருகில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை இருப்பதன் காரணமாக இரண்டு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கான சிகிச்சைகள் இடம்பெற்றன. அதேவேளை அண்ணளவாக 21 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தல் காலத்தில் அவர்களால் வெளியே சென்று வரமுடியாத நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில், நாங்கள் நண்பர்கள், மற்றும் புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் அவர்களுக்கான உதவிகளை வழங்கியுள்ளோம். அதேவேளை இனிவரும் காலங்களிலும் வழங்கவும் ஏற்பாடுகளை செய்துள்ளோம். தனிமைப்படுத்தல் காலத்தில் கொடுக்கப்படவேண்டிய 5 ஆயிரம் ரூபா பெறுமதியான நிதியானது அவர்களின் தனிமைப்படுத்தல் காலத்தின் பின்னரே பெற்றுக்கொள்ளும் முடியுமான நிலையைக் கண்டுள்ளோம். குறித்த நிதி உரிய காலப்பகுதியில் கிடைத்ததாக நான் உணரவில்லை. இது ஏற்கனவே இத்தாவில் என்ற பிரதேசத்தில் இடம்பெற்றது. இதற்கான காரணங்களை தேடியபோது கச்சேரியிலிருந்து கிடைப்பதற்கு கால தாமதமாகின்றது என்ற விடயத்தையே கடந்த காலத்தில் கூறியிருந்தார்கள். இது ஒரு பொதுவான நிலைப்பாடாகவே காணப்படுகின்றது என்றார். (ப-6)

## செஞ்சோலை மாதிரிக் கிராமத்தில் புலம்பெயர்ந்தோரால் குடி தண்ணீர் நீர் வசதி

கிளிநொச்சி, மே 8

கிளிநொச்சி மலையாளபுரம் வடக்கு கே.என். 9 கிராம அலுவலர் பிரிவிலுள்ள செஞ்சோலை மாதிரிக் கிராமத்துக்கு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது.

செஞ்சோலை மாதிரிக் கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களில் பலர் குடிதண்ணீர் வசதிகளற்றிருப்பதால் அவர்களால் புலம்பெயர் கொடையாளர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக சுமர் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் குழாய்க்கிணறு அமைக்கப்பட்டு, தண்ணீர் தாங்கிமூலமாக குழாய் வழங்கலினூடாக குடிதண்ணீர" வழங்கக்கூடியவகையில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ப-12)

## கண்டுவில் மேற்கு ஒழுங்கை மதுப் பிரியரின் கோட்டையா?

*மக்கள் விசனம்*

சாவகச்சேரி, மே 8

சாவகச்சேரி நகர வட்டார கண்டுவில் மேற்கு ஒழுங்கை குப்பைகொட்டும் இடமாகவும், மதுப் பிரியர்களின் கோட்டையாகவும் மாறி வருகிறது என மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் தெரிவிக்கையில்; இப்பகுதியில் உள்ள வயல்களில் சிறு தானியப்பயிர்கள் விதைக்கப்பட்டு அறுவடைக்குத் தயாராக உள்ளன. இந்த நிலையில் நுங்கு கோம்பைகளும் சிறுவர் முதியோர், பயன்படுத்தும் பம்பர்ஸ் உள்ளிட்ட கழிவுப் பொருள்களும், இனந்தெரியாதவர்களால் இரவு வேளைகளில் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் வீதியில் செல்வோரும் அயலில் உள்ள குடியிருப்புகளில் வசிப்போரும் துர்நாற்றம் தாங்க முடியாமல் வசிக்கின்றனர். பெருங்குளம் பகுதியில் இயங்கி வந்த தனியார் கல்வி நிலையம் மூடப்பட்டுள்ளதால் பெருமளவு இளம் வயதுகளை உடைய மதுப்பிரியர்கள் அங்குள்ள மரநிழலில் மது அருந்தி அவ்வழியே செல்வோரை தகாத வார்த்தைகளால் பேசுகின்றனர். எனவே இதுதொடர்பாக வட்டார உறுப்பினர் மற்றும் கிராம அலுவலர் போன்றோர் உடன் நவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ப-9)




## அசௌகரியத்தை நீக்கியது சங்கானை மக்கள் ஒன்றியம்

சங்கானை-அரசடிச் சந்தியில் நீண்டகாலமாக சீரமைக்கப்படாதிருந்த பஸ்தரிப்பு நிலையம் அமரர் திருநாவுக்கரசு நாகேஸ்வரியின் 5ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு புதிதாக அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது. குறித்த பஸ் தரிப்பிம் தொடர்பில் சங்கானை பிரதேச செயலரால் சங்கானை மக்கள் ஒன்றியத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுவின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில், சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த அமரர் திருநாவுக்கரசு நாகேஸ்வரியின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் பங்களிப்புடன் பஸ்தரிப்பு நிலையம் புதிதாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ப-319)

## யானைகள் அட்டகாசம்
## அம்பலப்பெருமாள்குளம் கிராம மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

முல்லைத்தீவு,மே 8

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளம் கிராம அலுவலர் பிரிவில் அதிகரித்துள்ள யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அப் பகுதி மக்கள் தெரிவிக்கையில் ; அக்கராயனில் இருந்து அம்பலப்பெருமாள்குளம் செல்லும் வீதியில் தேக்குக் காட்டுப் பகுதியில் மாலை 4 மணிக்குப் பின்னர் யானைகள் வீதிக்கு வருகின்றன, இதனால் மக்கள் அச்சத்துடனேயே போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர். இதேவேளை கடந்த பல மாதங்களாக அம்பலப்பெருமாள் குளத்தின் வழியாக நீந்தி வரும் யானைகள் தென்னைகள் மற்றும் நெற்பயிர்களை அழித்து வருகின்றன. இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. எனவே குறித்த பகுதியில் யானை வேலி அமைக்க சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். (ஐ-13)

# பொதுப் போக்குவரத்து வேண்டவே வேண்டாம்

*மன். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வலியுறுத்து*

மன்னார், மே 8

மன்னார் நகருக்குள் தேவையில்லாமல் வருவதையும் பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்துவதையும் மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் தீவின வேண்டுகோள் விடுத்துள்ளார்

மன்னாரில் நேற்றுமுன்தினம் புதிதாக 7 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இது தொடர்பாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று ஊடக சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்; மாவட்டத்தில் இந்த மாதத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. நேற்றுமுன்தினம் மாத்திரம் மன்னார் மாவட்டத்தில் 7 பேர் சமூகத்திலிருந்து கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

இந்த மாதம் மிகவும் ஆபத்தான மாதமாகக் கருதப்படுகின்றது. எனவே மக்கள் எவருடைய கண்காணிப்புக்களும் இல்லாமல் தாமாகவே சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும். அதனைவிட மன்னார் நகருக்குள் தேவை இல்லாமல் எவரும் வர வேண்டாம். அவ்வாறு வரும் பட்சத்தில் கூடுமான அளவு பொதுப் போக்குவரத்தைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. மேலும் உணவகங்களில் அமர்ந்திருந்து உணவருந்துதல், கூடி நின்று கதைத்தல் போன்ற செயற்பாடுகளை முற்றாகத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டு நிற்கின்றோம்

உணவக உரிமையாளர்கள் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட அளவு வாடிக்கையாளர்களை மட்டுமே உணவகங்களில் அனுமதிக்க வேண்டும்

அத்தோடு இந்தப் பிரச்சினை நீண்ட காலத்துக்கு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால் மக்களுக்குத் தேவையான உணவுகளை வீட்டுக்கே கொண்டுசென்று விநியோகிப்பது அதேபோல் ஏனைய நிறுவனங்களும் மக்களை அலுவலகங்களுக்கு வரவிடாமல் மக்களுடைய இடத்துக்கே சென்று அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு பொறிமுறைகளை உருவாக்குவது போன்ற செயற்பாடுகள் சாலச் சிறந்தவையா? இருக்கும் என்றார். (ப-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோருக்கு வாய்ப்பு

கொழும்பு,மே 8
2020 ஆம் ஆண்டில் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி, பல்கலைக் கழக அனுமதி கிடைக்கப்பெறாத மாணவர்களுக்கு, மாற்றுத் திட்டத்தை மேற்கொள்ள பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.
அதற்காக மாணவர்களின் தகவல்களை திறன் மேம்பாட்டு அமைச்சுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
தனியார் மற்றும் அரச நிறுவன கற்கை நெறிகளுக்கு மாணவர்களை ஈடுபடுத்தும் நோக்கில், அவர்களின் தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்துள்ளார். (ப-4)

# பி.சி.ஆர். பரிசோதனை கொடிகாமத்தில் தீவிரம்

கொடிகாமம் மே 8
கொடிகாமம் பகுதியில் கொடிகாமம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சாவகச்சேரி பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொடிகாமம் பொலிஸ் நிலையத்திலும் சாவகச்சேரி பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு சாவகச்சேரி பிரதேச சபை வளாகத்திலும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
கடந்த மாதம் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளானார். இதனை அடுத்து அவருடன் தொடர்புகளைப் பேணிய சாவகச்சேரி பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் சுய தனிமைப் படுத்தப்பட்டிருந்தனர் அவ்வாறு சுய தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கும், கொடிகாமம் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை இனங்காணப்பட்டதையடுத்து, சுயதனிமைப்படுத்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குமே நேற்று பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதேவேளை அல்லாரை மற்றும் கைதடி பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்க ளுக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ப-159)

# நெடுங்கேணியில் 5 கடைகள் பூட்டு

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியிலுள்ள கடைகள் மற்றும் மரக்கறி விற்பனை நிலையங்கள் மீது நேற்று திடீர் சோதனை நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினர், அங்கு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறிய ஐந்து கடைகளைப் பூட்டினர்.
நாட்டில் கொவிட் 19 மூன்றாவது அலையின் தாக்கம் வேகமாக அதிகரித்து வரும் நிலையில், வவுனியா வடக்கு பகுதியில் அதனை கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார நடைமுறைகள் தொடர்பாக பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அந்த வகையில் நேற்று வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியிலுள்ள கடைகள் மற்றும் மரக்கறி விற்பனை நிலையங்கள் மீது சுகாதாரப் பிரிவினர் மற்றும் பொலிஸார் இணைந்து திடீர் சோதனையை மேற்கொண்டனர். முகக் கவசம் அணியாதவர்கள் மற்றும் சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டனர். அத்தோடு சுகாதார நடைமுறைகளை மீறிய ஐந்து கடைகளை உடனடியாகப் பூட்டினர். (ப-110)

# மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகள்; நிலமையை உணர்ந்து செயற்படுங்கள்

## யாழ். மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், மே 8**
**யாழ்ப்பாணத்தில் மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகள் காணப்படுவதால் பொதுமக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
யாழ் மாவட்டத்தில் தற்பொழுது கொரோனா நிலைமை சற்று அதிகரித்த நிலையில் உள்ளது. நேற்று முன்தினம் 20 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு கிராமங்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. ஆயிரத்து 475 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 261 நபர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.
தற்போது பொலிஸார் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதவர்களை இனங்கண்டு அவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள்.
இந்த நடவடிக்கைகள் ஊடாக மக்களுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால் இந்த அபாயகரமான காலகட்ட நிலைமை நாடு முழுவதும் காணப்படுகின்றது எனவே மக்களுடைய வாழ்வாதார நடவடிக்கைகள் மற்றும் நாளாந்த நடவடிக்கைகளுக்கு பெருமளவில் அசௌகரியத்தை ஏற்படுத்தாத வகையில் இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.
எனவே பொதுமக்கள் கண்டிப்பாக சுகாதார வழிகாட்டலைப் பின்பற்றி தமது செயல்களை செயற்படுத்த வேண்டும். வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை சில முன்னேற்ற நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். அதாவது ஏற்கனவே கோப்பாய் மற்றும் கிளிநொச்சியில் இருந்த இரண்டு சிகிச்சை நிலையங்களுக்கு மேலதிகமாக மேலும் சில சிகிச்சை நிலையங்களைத் திறப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
கிளிநொச்சியிலும் 230 கட்டில்களுடன் ஒரு சிகிச்சை நிலையத்தை ஆரம்பித்துள்ளோம் அத்தோடு மருத்துவமனைகளையும் சிகிச்சை நிலையங்களாக மாற்றியமைப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனினும் அவசர சிகிச்சைக்குரிய கட்டில்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உள்ளன. எனவே அதனையும் அதிகரிப்பதற்குரிய நடவடிக்கையை சுகாதாரப் பிரிவினர் எடுத்துள்ளார்கள். மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவமனை வசதிகள் காணப்படுவதால் பொதுமக்கள் மிக அவதானமாக நடந்துகொள்ள வேண்டும் - என்றார். (ப-20)

# சதொச ஊடாக வவுனியாவில் அரசின் நிவாரணப் பொதிகள்



வவுனியா, மே 8
சதொச ஊடாக அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய ஆயிரம் ரூபா பெறுமதியான அரசாங்கத்தின் நிவாரணப் பொதி வவுனியாவிலும் வழங்கப்பட்டு வருகின்றது.
கொரோனாப் பெருந்தொற்றால் பாதிப்படைந்தவர்களுக்கு சதொச ஊடாக நிவாரணப் பொதி வழங்குவதற்கு வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன நடவடிக்கை எடுத்திருந்தார். அதனடிப்படையில் நாடு பூராகவும் உள்ள சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதி கடந்த முதலாம் திகதி முதல் வழங்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில், வவுனியா சதொச விற்பனை நிலையத்திலும் ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ம-18)

# கொவிட் சிகிச்சை நிலையமாக பொருளாதார மத்திய நிலையம்

வவுனியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
நாட்டில் கொவிட்-19 மூன்றாம் அலையின் தாக்கமானது வேகமாக அதிகரித்து வரும் நிலையில், நாடு முழுவதும் 8ஆயிரம் நோயாளர்கள் சிகிச்சை பெறத்தக்க வகையில் கொரோனா சிகிச்சை மையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கொவிட் செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்திருந்தார். அதற்கமைய பல மில்லியன் ரூபா செலவில் வவுனியாவில் அமைக்கப்பட்டு பயன்பாடற்ற நிலையில் காணப்படும் பொருளாதார மத்திய நிலையத்தை 100 கட்டில்களைக் கொண்ட கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ப-110)



# ரூ. 2 அரைக் கோடி பெறுமதியான போதைப்பொருள்கள் மீட்பு

## கிம்புலாஹெலே குணாவின் சகா கைது

கொழும்பு, மே 8
கொழும்பு புளுமெண்டல் பகுதியில் பெருந்தொகையான போதைப் பொருள்கள் மற்றும் 4 லட்சம் ரூபா பணத்துடன் கிம்புலாஹெலே குணாவின் சகா கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை, பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும், பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரும் முன்னெடுத்து வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
கொழும்பு புளுமெண்டல் பகுதியில் நேற்றுக் காலை விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். 23 வயதுடைய இளைஞனிடமிருந்து 2 கிலோ கிராம் ஐஸ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட தொடர் விசாரணைகளுக்கமைய கஞ்சா போதைப்பொருளை பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஹேஸ் வகை போதைப்பொருள் 4.5 கிலோ கிராம், 4 இலட்சம் ரூபா பணம் என்பவைமீட்கப்பட்டுள்ளன.
நாட்டில் பல்வேறு குற்றச் செயற்பாடுகளைப் புரிந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுள்ளார் என்று கூறப்படும் கிம்புலா ஹெலே குணா மற்றும் அவரது சகோதரன் சுரேஸ் ஆகியோரின் வழிநடத்தலின் கீழ் இந்த போதைப் பொருள் கடத்தல் இடம்பெற்று வருகின்றது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபரிடமிருந்து மீட்கப்பட்ட போதைப் பொருள்கள் சுமார் இரண்டரை கோடி ரூபா பெறுமதியுடையவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும், திறமையும் உள்ள

- மேசன்
- கூலியாட்கள்
- வெல்டர்
- தச்சுவேலைசெய்வோர்
- தொழிநுட்ப உத்தியோகத்தர் (T.O)

தேவை.

தொடர்பு:076 316 5734, 077 985 1946
e.mail: jenoshanark@gmail.com


**நாஹா மருத்துவ நிலையம்**

கடுமையான திடீர் கை, கால் செயலிழப்புக்கள், ஆஸ்மா, பிறசரின் தீவிர பாதிப்பு, தீராத அல்சர், இரத்தம் பாதிப்பினால் வரும் புண்கள், குழந்தையின்மை - சிறப்பு மருத்தியல்.

T.P.: 077 321 2740

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி கதிர்காமத்தம்பி

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கு, மற்றும் ரொறன்ரோ கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சி. கதிர்காமத்தம்பி நேற்று (07.05.2021) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சிதம்பரேஸ்வரி தம்பதிகளின் மகனும், காசிப்பிள்ளை திலகவதி தம்பதிகளின் மருமகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், ரமேஷ், வாசுகி, ஜானகி, ஆகியோரின் பாசமிகு தந்தையும், மங்கையற்கரசி, அன்னலட்சமி, சிவசுப்பிரமணியம், சிவானந்தன் ஆகியோரின பாசமிகு அண்ணனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, தனபாலசிங்கம் மற்றும் பகீரதி, வதனா காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, பாலசுப்பிரம ணியம் ஆகியோரின் மைத்துனரும், கமலநாதனின் சகலனும் ஆதினி, கணேஸ்வரன், சுந்தரவடிவேல் ஆகியோரின் மாமாவும், வர்சினி, வர்ணன், கரன், ஹரீஸ், கீரன், விதுஷா, மனோஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.


இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இணுவில் மேற்கு,
வட்டுவினி.

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மலர்வு
06 . 06 . 1937



உதிர்வு
04 . 05 . 2021

### கலைமாமணி ஆறுமுகம் முருகேசு

(முன்னாள் தபாலதிபர்)

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, வெள்ளவத்தை ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் தபாலதிபர் கலைமாமணி ஆறுமுகம் முருகேசு கடந்த 04.05.2021 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற கோவிந்தர் ஆறுமுகம், சிதம்பரம் ஆறுமுகம் தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற ஆசிரியர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம், இலக்குமி அம்மா சுப்பிரமணியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவசோதி அம்மாவின் அன்புக் கணவரும், ரவீந்திரன் (கட்டுப்பாட்டாளர், யாழ் FM, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), நந்தகுமார் (சிரேஷ்ட உதவிப் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சிறீதரன் (முகாமையாளர், Phoenix Ogilvy, Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருணாதேவி, காலஞ்சென்ற கௌரிமனோகரி (மருத்துவர்) மற்றும் சிவகௌரி (பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும், செந்தூரன் (சித்த மருத்துவ அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), மாதங்கி (யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), மாதுமை (வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), சேயோன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), கஜானன் (சென். தோமஸ் கனிஷ்ட பாடசாலை, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் இரத்தினசபாபதியின் உடன் பிறவாத சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிறீராகவன், இந்திராணி, சிவானந்தன் மற்றும் பரஞ்சோதி அம்மா, ஞானசோதி அம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (06.05.2021) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 466 9610

# கொரோனாவிலிருந்து விடுபட இன்று விசேட வழிபாடுகள்

கொழும்பு,மே 8

நாடு கொரோனா வைரஸ் தொற்றிருந்து விடுபட வேண்டி, சகல வணக்கஸ்தலங்களிலும் இன்று மாலை 5.46 மணிக்கு விசேட வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

அதற்கமைவாக, கோவில்களில் விசேடமாக, பஞ்ச ஈஸ்வரங்களில், மஹா மிருத்யுஞ்சய ஹோமம் நடத்துமாறு சமய கிரியைகள், புத்தசாசன மத விவகார அமைச்சின் இந்து சமய விவகார இணைப்பாளரும் சர்வமத இந்து பீட செயலாளருமான கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா கோரிக்கை விடுத்துள்ளார். (ப-4)

### அ”புரத்திலிருந்து...

பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

10 நாள்களுக்கு முன்னர் அநுராதபுரத்தில் இருந்து வந்த மூவர், காணி தொடர்பான விடயமாக நயினாதீவில் சிலரைச் சந்தித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்களில் ஒருவருக்கு தற்போது கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதையடுத்து நாக விகாரையின் விகாராதிபதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்று நேற்றிரவு தகவல் பரவியது. எனினும் அவர்கள் விகாராதிபதியைச் சந்திக்கவில்லை என்றும், அதனால் விகாராதிபதி தனிமைப்படுத்தப்படவில்லை என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அதேவேளை, தேசிய வெசாக் நிகழ்வுகளை இம்முறை நயினாதீவில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த நிகழ்வுக்குக் கொழும்பில் இருந்து பல தரப்புக்கள் வரவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-319)

### நீர்த் தேக்கத்தில்...

நீர்த் தேக்கத்தில் மீன்பிடிப்பதற்காக நேற்று 5 பேர் சென்றுள்ளனர். அதில் ஒருவர் நீரில் இறங்கியபோது மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

ஏனையோர் அவரை தேடி மீட்க முயன்றபோதும், அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதையடுத்து இந்த விடயம் கிராம மக்களுக்கும், பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. கிராமத்தவர்கள் இணைந்து நீர்த் தேக்கத்தில் தேடியபோதும் நேற்று மாலைவரை அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. (எ-110)

### கொரோனா...

இந்த உயிரிழப்புகளுடன் இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 764ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றால் ஒரேநாளில் அதிக உயிரிழப்புக்கள் நேற்றே பதிவாகியுள்ளன. (எ-இ)

## நல்லூர் பிரதேசசபை கொக்குவில் உப அலுவலகம்

## ஆதனப் பெயர் மாற்றம்

மேற்படி ஆதனவரி வட்டாரம் 04,ஆதனவரி இலக்கம் 18, கேணியடி ஒழுங்கையிலுள்ள இவ்வாதனம் நல்லூர் பிரதேசசபை கொக்குவில் உப அலுவலக - ஆதனப்பதிவேட்டில் G. இரத்தினசபாபதி, செல்வி சிவபாதசுந்தரம் சிவநேசசோதி என்றபெயரில் காணப்படுகின்றது.

இவ்வாதனமானது ஆதனவரிபதிவேட்டில் மேற்படிபெயரில் காணப்படுகின்றபோதும் சிவபாதசுந்தரம் இராஜேஸ்வரன் என்பவர் பி.நொ. வி.பொன்னம்பலம் அவர்கள் முகதாவில் 75ம் இலக்கத்தில் 05.11.1997 இல் வெளிப்படுத்தல் சாதனமூலம் நில.பர்.32 வெளிப்படுத்தியுள்ளார்.(ஆதனவிபரம் வடமாகாணம்.யாழ் பகுதி, நல்லூர் கோவில்பற்று, கொக்குவில் கிழக்கு ஜே /126ஆகும்.

குறித்த ஆதனத்தை பி.நொ. சுப்பிரமணியம் பரமராசா அவர்கள் முகதாவில் 224ம் இலக்க 09.08.1999 ஆம் திகதி சிவபாதசுந்தரம் இராஜேஸ்வரன் என்பவர் மூலம் தட்சணாமூர்த்தி ஜெயபாலன் பெண் சிவநேசமலருக்கு நன்கொடையாக நில.பர.3 ஐ வழங்கியுள்ளார்.

அதே ஆதனத்தை பி.நொ. எஸ்.பரமராசா அவர்கள் முகதாவில் 2513ம் இலக்க 01.07.2002ஆம் திகதி தட்சணாமூர்த்தி ஜெயபாலனும் பெண் சிவநேசமலரும் தங்கள் புதல்வியாகிய ரி.சிவானந்தராசா பெண் சிவநேசஜோதிக்கு சீதனமாக மேற்படி அளவுள்ள ஆதனத்தை வழங்கியுள்ளார்கள்.

அதே ஆதனத்தை தற்போது (2007ம் ஆண்டு) நியூசிலாந்தில் இருக்கும் ரி.சிவானந்தராசாவும் பெண் சிவநேசஜோதியும் அவர்களது தத்துவ உரித்தாளர் திருமதி.சிவநேசமலர் ஜெயபாலன் ஊடாக பி.நொ. திருமதி.எஸ்.சிவபாதம் அவர்கள் முகதாவில் 8266ம் இலக்க 01.02.2017ம் திகதிய அறுதி உறுதி மூலம் இன்பநாயகம் இளஞ்செழியன் பெண் சுபோதினிக்கு உத்தரவுபெற்ற நில. அளவையாளர் திரு.கே.கனகசபை அவர்களின் 6818ம் இலக்க 01.02.2017 ஆம் திகதிய நில. அளவைப் படத்தின்படி நில.பர.3 குழி 01.78 அளவுள்ள ஆதனத்தை வழங்கியுள்ளார்.

குறித்த விபரமுடைய ஆதனத்திற்கு எல்லைகளாக கிழக்கு சுப்பையா இராசையாவின் ஆதனமும் வடக்கு மேற்கும் ஒழுங்கையும் தெற்கு சிவபாதசுந்தரம் ஞானேஸ்வரன் என்ற விபரத்திலும் காணப்படுகின்றது.

இவ்வாதனத்தை திரு.இன்பநாயகம் இளஞ்செழியன் பெண் சுபோதினி என்பவர் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தாரியின் ஆரம்ப உறுதியான 75ம் இலக்க உறுதி வெளிப்படுத்தல்சாதனமாக காணப்படுவதால் ஆதனம் தொடர்பானவிபரங்கள் பத்திரிகை மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

இவ்வாதனம் தொடர்பாக ஏதும் ஆட்சேபனைகள் காணப்படின் எழுத்து மூலமாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்கள் தங்கள் உறவினரூடாகவோ சரியான ஆவணங்களுடன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தங்கள் ஆட்சேபனையைத் தெரிவிக்கலாம்.

சட்டபூர்வமான ஆவணங்கள் இல்லாத ஆட்சேபனைகள் என்னால் ஏற்றுக் கொள்ளமுடியாது என்றும்,ஆட்சேபனைகள் ஏதும் கிடைக்காத சந்தர்ப்பத்தில் தற்போதைய விண்ணப்பதாரி பெயரில் ஆதனப்பெயர் மாற்றம் மேற் கொள்ளப்படும் என்றும் ஆதனப்பெயர் மாற்றம் மேற்கொள்வதால் வரக்கூடிய எப்பிரச்சனைகளிற்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளி இல்லை என்பதனை சகலருக்கும் தெரிவித்து வெளிப்படுத்துகின்றேன்.

தங்கள் சேவையிலுள்ள
ப.மயூரன்
கௌரவ தவிசாளர்,
நல்லூர் பிரதேசசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்கள்...

இந்தக் கையளிப்பு நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் என்று துறைசார் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வாக்குறுதி வழங்கியிருந்த நிலையிலேயே இவ்வாறானதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியாவுக்கு கடந்த மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வந்திருந்தார். அவர் அங்குள்ள சிங்கள மக்களைச் சந்தித்திருந்தார். இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கள மக்கள் சிலர், தமக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்றும், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை அதனைச் செயற்படுத்தவில்லை என்றும் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இதன்போது மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது என்று முல்லைத்தீவு மாவட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 8 கிராம அலுவலர் பிரிவுகளையும், கரைதுறைப்பற்று பிரதேச செயலக நிர்வாகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியிருந்தார்.

ஜனாதிபதியின் கிராமத்துடன் உரையாடல் திட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்களை செயற்படுத்துவதற்காக அமைச்சர் நாமல் ராஜபக்ச தலைமையில் அண்மையில் ஓர் செயலணி நிறுவப்பட்டது. அந்தச் செயலணியின் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியா போகஸ்வெளவில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டத்துக்கான நிகழ்சி நிரலில், மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு வர்த்தமானியில் அடையாளப்படுத்தப்பட்ட இடங்களின் நிர்வாகங்களை ஒப்படைத்தல் என்ற விடயமும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தக் கையளிப்பு விவகாரத்தை இடைநிறுத்துவதாக, மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு பொறுப்பான துறைசார் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கடந்த புதன்கிழமை சந்தித்தபோது உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## பைசர்...

அதிகாரசபையின் ஆலோசனைக் குழு அனுமதி வழங்கியுள்ளது. அதற்கு அமைவாக 50 லட்சம் பைசர் தடுப்பூசிகளை இறக்குமதி செய்வதற்குத் தயாராகவுள்ளோம் என இராஜாங்க அமைச்சர், மருத்துவ நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். (ஒ-இ)

## அனைத்து...

கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வரும் நிலையில் மாணவர்களின் சுகாதார பாதுகாப்பு நலனைக்கருத்திற்கொண்டே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ், சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் ஏப்ரல் 19 ஆம் திகதி சுகாதார நடைமுறைகளின் பிரகாரம் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகின. எனினும், கொரோனாத் தொற்று மீண்டும் தலைதூக்கியதால் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டது. பல்கலைக்கழகங்கள் மீள திறக்கப்படுவதும் பிற்போடப்பட்டது. தனியார் வகுப்புகளும் நிறுத்தப்பட்டன.

மாகாண கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின் பிரகாரம் பாடசாலை மீள ஆரம்பிக்கப்படும் திகதி அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த விடுமுறை மே 3 முதல் 7 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

மே 10 ஆம் திகதி கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியுமா என்பது பற்றி 7ஆம் திகதி அறிவிக்கப்படும் என கூறப்பட்டிருந்தது. இந்நிலையில் அது தொடர்பான அறிவிப்பை கல்வி அமைச்சர் நேற்று விடுத்தார்.

'நாட்டில் தற்போது கொரோனா பரவுவதால், வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக மாணவர்களின் சுகாதாரப் பாதுகாப்பை கருத்திற்கொண்டு கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார நிலைமை சீரான பின்னர் பாடசாலைகள் மீள எப்போது ஆரம்பிக்கப்படும் என்பது தீர்மானிக்கப்பட்டால் அது தொடர்பில் மூன்று நாள்களுக்கு முன்னரே அறிவிக்கப்படும். நாட்டின் சுகாதார நிலைமை தொடர்ந்தும் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது' என்றார். (ஒ-44)

## யாழ்.மாநகர சபை...

ஐவரும் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். வாக்குமூலம் பெறுவதற்காகவே அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 11ஆம் திகதி காலை 9 மணிக்கு கொழும்பிலுள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவு அலுவகத்தின் 4ஆம் மாடிக்குச் சமூகமளிக்க வேண்டும் என்று ஐவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகரத்தைத் தூய்மையான நகரமாகப் பேணுவதற்காக யாழ்ப்பாணம் மாநகர சபையால் குழு ஒன்று அமைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் ஐவர் அடங்கிய இந்தக் குழுவுக்குப் பிரத்தியேக சீருடையும் வழங்கப்பட்டது. அந்தச் சீருடை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் பயன்படுத்த சீருடை ஒன்றை ஒத்துள்ளது என்று தெரிவித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னர் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்டுப் பின்னர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். (எ-26)

## யாழ்.மாவட்டத்தில்...

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம். ஆகியவற்றில் நேற்று 668 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 18 பேருக்கும், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் தலா ஒவ்வொருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 3 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 9 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் மூவர் பொலிஸ் உத்தியோகத்தர்கள். மற்றொருவர் தொற்றாளருடன் முதன்மைத் தொடர்புடையவர்.

சுன்னாகத்தில் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்று பி.சி.ஆர். பரிசேதனையில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட [illegible] வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்குச் சென்ற ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் பொது மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுக்குச் சிகிச்சைக்குச் சென்ற ஒருவருக்கும் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## சைனோஃபோர்ம்...

இது பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் தரம் ஆகியவற்றிற்கான உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் பெறும் 6 ஆவது தடுப்பூசியாகும்.

அதேவேளை, சீனா இலங்கைக்கு 6 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகளை அன்பளிப்பாக வழங்கியிருந்தது. உலக சுகாதார நிறுவனத்தின் அனுமதி கிடைக்காமையால் இதுவரை அந்தத் தடுப்பூசிகள் பயன்படுத்தப்படவில்லை. தற்போது அனுமதி கிடைத்துள்ள நிலையில் அந்தத் தடுப்பூசிகளை ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-இ)

## நாள்தோறும்...

லட்சத்து 21 ஆயிரத்து 338 ஆக எகிறியுள்ளது. அதேவேளை, கொரோனா நோயாளர்களில் ஒரு லட்சத்து ஆயிரத்து 763 பேர் குணமடைந்துள்ளனர். 18 ஆயிரத்து 830 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 745 பேர் உயிரிழந்துள்ளனர். (எ-22)

## தேவை...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, நாடு முடக்கப்படுமா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கிராம சேவகர் மட்டத்தில் தனிமைப்படுத்தல் இடம்பெற்று வருகின்றது. தேவைக்கேற்ப 'லொக்டவுண்' செய்யும் அதிகாரம் பிரதேச சுகாதாரப் பணிப்பாளருக்கும், அரச அதிகாரிக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்த இருவரும் கலந்துரையாடி அது குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

நாட்டை முடக்குவது குறித்தோ, மாகாணங்களுக்கிடையில் பயணத்தடை விதிப்பது பற்றியோ இன்னும் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. தேவையேற்படின் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். (எ-22)

## தேசியவெசாக்...

தேசிய வெசாக் நிகழ்வுகளை இம்முறை நயினாதீவில் உள்ள விகாரையில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டு பெரும் எடுப்பில் முன்னாயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் தற்போது நாட்டில் கொரோனாத் தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில் நிகழ்வுகள் அனைத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தேசிய வெசாக் நிகழ்வுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவினருடன், 300 பேருடன் நடத்தப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடந்த முன்னாய்த்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, வெசாக் நிகழ்வை நடத்துவதற்காக நயினாதீவில் உள்ள மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி ஏற்ற முடியாதா? என்று கேட்டிருந்தார்.

இந்தநிலையில், வெசாக் நிகழ்வுகளை [illegible] மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக [illegible] என்று தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரிடம் கேட்டபோது, உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்.

அதேநேரம், வெசாக் நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ள ஆயிரம் பேருக்கு உணவு தயாரித்து வழங்குவதற்காக நயினாதீவில் உள்ள மண்டபம் ஒன்று பெறப்பட்டிருந்தது என்றும், தற்போது மண்டபம் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அறிய முடிகின்றது. (எ-319)

## 5ஆயிரத்துக்கும்...

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தகவல்படி, தற்போது நாட்டில் மொத்தம் 18 ஆயிரத்து 830 கொரோனாத் தொற்றாளர்கள் இருக்கின்றனர். அவர்களில் 13 ஆயிரத்து 43 பேர் மட்டுமே அரசின் கொரோனா சிகிச்சை நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

5 ஆயிரத்து 787 கொரோனாத் தொற்றாளர்கள் இன்னும் மருத்துவமனைக்ள் அல்லது கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு மாற்றப்படவில்லை என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, 4 ஆயிரத்து 906 நோயாளர்கள் அரசின் 43 மருத்துவமனைகளிலும், 6 ஆயிரத்து 51 நோயாளிகள் கொரோனா சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 2 ஆயிரத்து 86 நோயாளிகள் 13 தனியார் சிகிச்சை நிலையங்களிலும் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 2 ஆயிரத்து 500 படுக்கைகளைக் கொண்ட கொரோனா சிகிச்சை நிலையம் ஒன்று இராணுவத்தின் பங்களிப்புடன் தயார்படுத்தப்பட்டுள்ளது.

இன்னும் 5 ஆயிரம் படுக்கைகளைக் கொண்ட கொரோனா சிகிச்சை நிலையம் எதிர்வரும் நான்கு அல்லது ஐந்து நாட்களில் பூர்த்தியாகும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (எ-22)

## மயங்க...

அவர் அணிந்திருந்த நகைகள் கொள்ளையிடப்படிருந்தன. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் முச்சக்கர வண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திய ஒருவர் நாவற்குழி பகுதிக்கு முச்சக்கரவண்டியில் சென்றுள்ளார். ஓரிடத்தில் சாரதிக்கு பால் பைக்கற் ஒன்றைக் கொடுத்துள்ளார். அதை அருந்திய சாரதி மயக்கமடைந்துள்ளார். அவரிடம் இருந்தும் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் புத்தூர் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பால் பைக்கற்றில் கொக்கெயின் போதைப் பொருள் கலந்து அருந்தக் கொடுத்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவார் என்றும், விசாரணையின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளாந்தம் குறைந்தது 25 ஆயிரம் பி.சி.ஆர்.

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் வலியுறுத்து

கொழும்பு.மே 8

ஒரு நாளைக்கு குறைந்தது 25 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகளையேனும் மேற்கொள்ள வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் எம்.பாலசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் கொரோனாத் தொற்று தீவிரமடைந்துள்ளது. மாவட்டங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படாத காரணத்தால், தொற்றுப் பரவல் வேகமடைந்துள்ளது. அதனால், தொற்றுப் பரவலைக் கண்டறிவதற்கான பரிசோதனைகள் துரிதப்படுத்தப் பட வேண்டும்.

அத்துடன் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் அறிக்கைகள், இரண்டு அல்லது மூன்று தினங்களுக்குப் பின்னரே வழங்கப்படுகின்றன. அறிக்கை கிடைப்பதற்கு இடையிலான காலப்பகுதியில், ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கோ அல்லது பலருக்கோ, வைரஸ் பரவலடையும் வாய்ப்பு அதிகமாகும். இது ஒரு பாரதூரமான நிலைமையாகும். அதேவேளை, நாட்டுக்குள் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், மருத்துவமனைகளிலும் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதற்கு மாற்றீடாக, வீடுகளுக்குள்ளேயே தொற்றாளர்களைத் தனிமைப்படுத்தி, அங்கு அவர்களுக்கான சிகிச்சைகளை முன்னெடுப்பதே சிறந்த வழியாகும் - என்றார். (ப-4)

# தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் 2 ஆயிரத்தை கடக்கும்

## தொற்று நோயியல் பிரிவு எச்சரிக்கை



**கொழும்பு,மே 8**

**இலங்கையில் நாளாந்தம் பதிவாகும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்துக்கும் மேல் அதிகரிக்கக்கூடும் என்று தொற்று நோயியல் பிரிவின் விசேட மருத்துவர் சுதத் சமரவீர எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஒரு வாரமாக நாளாந்தம் பதிவாகும் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 500 ஐ கடந்துள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடிய நிலைமை உள்ளது. இதனை எதிர்வரும் தினங்களில் அறிந்து கொள்ள முடியும். எனவே சுகாதாரக் கட்டமைப்பு என்ற ரீதியில் விரைவாகத் தொற்றாளர்களை அடையாளங்கண்டு நோயாளர்களை மருத்துவமனைகளில் அனுமதித்தல் அல்லது இடைப்பட்ட சிகிச்சை நிலையங்களில் அனுமதித்தல் அல்லது ஏனையவர்களிடமிருந்து தனிமைப்படுத்தல் வேண்டும்.

மறுபுறத்தில் இந்த நோய் பரவுவதைத் தடுப்பதற்காக பொதுமக்கள் சார்பில் வழங்கப்படும் பங்களிப்பின் அடிப்படையில் தொற்றாளர்களைத் தீர்மானிக்க முடியும்.

தற்போது நோயாளர்கள் அதிகரிப்பதால் தான் சிகிச்சையளிப்பதற்கான ஏற்பாடுகளை அரசு தீவிரப்படுத்தி யுள்ளது. இதற்கு முன்னர் இவ்வாறான ஏற்பாடு இருக்க வில்லை. அவசர சிகிச்சைப் பிரிவுகளின் எண்ணிக்கையையும் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (ப-4)

# வெலிசற பொ.ம.நி. மூடப்பட்டது

வெலிசற பொருளாதார மத்திய நிலையம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

குறித்த பொருளாதார மத்திய நிலையத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர். அந்த நிலையமும் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ப-4)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.**

**யாழ் நகரிலிருந்து 1½ km தூரம்**

**(பரப்பின் விலை 6 லட்சம் ரூபா)**

**தொடர்பு: 077 288 0152, 074 075 4204**

**நீர்க்கசிவை தடுப்பதற்கு Water Proofing**

உங்கள் இல்லங்கள், கடைத்தொகுதிகள், கோயில்களில் ஏற்படும் சிறிய நீர்க்கசிவுகளை நீங்களே நிறுத்திக் கொள்வதற்கான இரசாயனப் பொருட்கள், அதற்குரிய தொழிநுட்ப உதவிகளையும் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

நீர்க்கசிவை தடுப்பதற்கான இரசாயனங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**வடமாகாணத்தில் 10 வருட அனுபவம் வாய்ந்தவர்கள்**

North and East Engineering
55 Stanly Road, Jaffna.
077 5244 177, 077 232 3000, 021 222 2363

**வீடு விற்பனைக்கு உண்டு**

31/3, டேவிற் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்புக்கு: 076 106 1407, 077 526 1407
021 222 1270

**வாடகைக்கு**

கொழும்புத்துறை கிழக்கு பிரதான வீதியில் மூன்று படுக்கை அறை, சமையல் அறை, இரண்டு பெரிய HALL இரண்டு குளியல் அறையுடன் புதிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 076 042 4511

**A Level Maths Class**

கடந்த கால வினாக்கள் மற்றும் மாதிரி வினாக்களுடன் மாணவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ள கூடிய உத்திகளுடன் பிரத்தியேக வகுப்புக்கள் Personal Classes வீடு வந்து கற்பிக்கப்படும்.

Easymaths Accademy
077 570 5379

**பொருளியற்கல்லூரி**

நாவலர் வீதி யாழ்ப்பாணம். கே.கே.எஸ் வீதி சுன்னாகம்.

**BARATHY**
சித்தன்கேணி

எமது மூன்று நிறுவனங்களிலும் அதியுயர் பெறுபேறு பெற்று எமது நிறுவனத்திற்கு பெருமை ஈட்டித் தந்த மாணவர்களை வாழ்த்துவதோடு

**A/L Day Classes**
**கலை-வர்த்தகப் பிரிவு**
**Zoom Classes**
**ஆரம்பம்10.05.2021 திங்கள்**

உங்களது அனுமதிகளை சனி, ஞாயிறு தினங்களின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்


யாழ்.நகரில்– 077 220 9651
சுன்னாகத்தில்– 076 638 5294
சித்தன்கேணியில் 077 940 8682

Note: A/L 2021,2022,2023 இற்கான Zoom Classes நடைபெறுகின்றன.

மேலதிக [illegible]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 08 . 02 . 1953



மறைவு 08 . 04 . 2021

கடந்த 08.04.2021 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவன்

## அமரர் திரு. சபாரட்ணம் ரவிந்திரலால்

அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து, சொல்லில் தூய்மை கொண்டு
இறை தொண்டாற்றுவதையே சிந்தையில் தினம் கொண்ட - நீர்
ஏகாதசி திதி தன்னில் முத்துமாரி அம்பாளிடமே சோதி வடிவானீரோ?
மாதமொன்றானாலும் மறக்கவோ உம் இழப்பை ஏற்கவோ
முடியாமல் கண்களில் நீர் சொரிய உம்
ஆன்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்

**முக்கிய அறிவிப்பு**

எம் நல்வாழ்வுக்கு வழிகாட்டியாய் திகழ்ந்து எம்மை மீளாத் துயரில் விட்டு சென்ற எம் குடும்ப தலைவனின் இழப்பு செய்தி அறிந்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, தற்போதைய நாட்டின் அசாதாரண சூழ்நிலையினை கருத்தில் கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை குடும்ப அங்கத்தவருடன் நடைபெறும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
கேணியடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்
077 645 0803

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூ[illegible] 36 [illegible] க்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.